382

17 OCT 1922

# மனோமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

தொகுதி 1.] 1922ஞு அக்டோபர்மீ 1௳ [பகுதி 9.

இந்த அமராவதி யென்னும் நாவல்

ஸ்ரீமான்

ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்

இயற்றப்பட்டது

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்

நா. முனிசாமி முதலியாரால்

பிரசுரிக்கப்பட்டது

1922

காபிரைட்] [ரிஜிஸ்டர்ட்.

# மனமோகினி

**ஓர் மாதாந்த சஞ்சிகை.**

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தர வேண்டியதா யிருத்தலின், அதில்ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று இதனை ஆரம்பித்திருக்கின்றோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது முதலில் மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் வெளியாய் வருகிறது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. இதற்குச் சந்தாதாரராகச் சேர்வோருக்கு இரண்டரை ரூபாய்க்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்களை அடைதலும், சிரமமின்றி ஒவ்வொரு மாதத்திலும் வாசித்து வந்து ஒரு வருஷத்தில் இரண்டு புத்தகங்களை முடித்தலுமாகிய சௌகரியங்கள் கிடைக்கும். இதன் முதற் சஞ்சிகை 1922௵ பிப்ரவரி௴ 1௳ வெளியாயாய்விட்டது. அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டதினால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

**மானேஜர்: "ஆனந்த நிலையம்"**

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

17 OCT 1922

வரையில் நீ களங்கமின்றி யெதுவாயினும் கூறலாம்'' என்ருன்.

ஹோட்டல்காரன்:—நீ இங்கு வந்து சற்றேறக்குறைய இரண்டு மாதங்களாகியும் இங்கேயே ஒரு அறையெடுத்துக்கொள்ளாம லிருக்கிற காரணம் என்னமோ என்பதைக் கேட்க வேண்டுமென்பதே என் ஆவல்.

பிரேமநாதன்:—அதுவா? பின்னென்றுமில்லை. இங்கு என் போல் வாலாயமாக வந்து ஆகாரம் எடுத்துக் கொள்வோர்களில் பெரும்பாலோர் இங்கு அறையெடுத்துக் கொள்ளவில்லையே யென்பதே நான் எடுத்துக் கொள்ளாததற்குக் காரணம்.

ஹோட்டல்காரன்:—"அப்படியா! இங்கு வருகிறவர்களில் பெரும்பாலோர், குடியர்கள்; இரவு இரண்டு மணி மூன்று மணி வரையில் கூட அமக்களம் செய்துக்கொண் டிருப்பவர்கள். அவர்களுக்கு இத்தகைய யோக்கியமான இடம் சரிப்படாது. நீ அளவு மீருமல் யோக்கியதையோடு நடப்பவனுதலால் நீ யிங்கு சயனித்துக் கொள்ளலாமே யென்று கேட்டேன்'' என்ருன்.

பிரேமநாதன் இவனுக்கு நம்மேல் பிரியமுண்டாகும்படி நடந்து கொள்வதே நமக்கு அனுகூலமென்று எண்ணிக்கொண்டு "ஆம் நீ கூறுவது நியாயமேயென்று இப்போது எனக்குத் தெரிகிறது. இரண்டொரு நாட்களில் இங்கேயே வந்து விடுகிறேன். ஏனெனில் ஒரு விடத்தில் சில நாட்களிருந்து இரண்டொரு நாட்களாவது முன்னடி கூறுவிடின் நியாயமாயிராதல்லவா?'' என்ருன்.

ஹோட்டல்காரன் "ஆம், ஆம், அதுதான் நியாயம். இப்போது எந்த விடத்தில் வசிக்கிறாய்?'' என்ருன்.



186482

பிரேமநாதன் தான் வசிக்குமிடத்தை யவனுக்குரைக் கலாகாதென்று "நானா? அதோ அந்தத்தெருவின் கோடியில்—தெருவின் பெயர் தெரியவில்லை. ஆ! இதென்ன நீ ஒயினைச் சரியாகச் சாப்பிடவே காணோமே—இது முடியட்டும். இன்னொருபுட்டி கொண்டுவர ஆக்ஷேபனையேன். இரண்டிற்கும் நானே பணம் கொடுப்பேன்." என்றான். ஹோட்டல்காரன் சந்தோஷத்தோடு ஒரு தடையுமில்லையென்று கூறிக்கொண்டே சென்று மறுபடி யொருபுட்டி கொண்டு வந்தான். பிரேமநாதன் அதையும் புகழ்ந்து கூறிக்கொண்டே யிருந்து ஏதோ பேசுவதற்காகவே ஒரு விஷயத்தை யாரம்பிப்பவன்போல்,

"ஹா அந்த கப்பற்சேதம் மகாகோரமான தல்லவா?" என்றான்.

ஹோட்டல்காரன்:—ஆம் ஆம். அடடா பத்துபனிரண்டு பேரேனும் பிழைத்திருந்தால் ஐந்தாறு பேர்களாவது ஹோட்டலுக்கு வந்திருப்பார்கள். அவர்களுடைய பெட்டிகளெல்லாம் போய்விட்டாலும் கையில் ரொக்கப்பணமேனும் இருந்திருக்குமே.

பிரேமநாதன்:—கப்பல் சேதமடையும்போது நீயும் அங்கிருந்ததாகவும் ஒருவன் மற்றுமே காப்பாற்றப்பட்டதாகவும் கூறினையே. அவன்கூட மிக நாணயமானவன், மிக்க அழகுடையவன், கன்னச் சிலுப்பா வைத்துக்கொண்டு வாள்போன்ற மீசைவிட்டுக் கொண்டிருந்தானென்றும் கூறினையே.

ஹோட்டல்காரன்:—இதெல்லாம் கூறினேனா? எனக்கு நினைப்பில்லை. ஆனல் அப்படித்தான் இருக்கவேண்டும். இன்றேல் உனக்கு இவையாவும் எப்படித் தெரியும்.

பிரேமநாதன்:—அவனுவது இங்கே வந்திருந்தால், நாண யமானவனென்ற வரையில் உனக்குச் சுமாராக இலாபம் கிடைத்திருக்கும். ஒரு சமயம் அவனுக்கு இங்கு யாரேனும் சிநேகரிருந்து அவர்கள் அழைத் துச் சென்ருர்களோ?

ஹோட்டல்காரன் பிரேமநாதன் அருகில்வந்து குசு குசுவென்று "அதுதான் எனக்கு மிக்க கோபத்தையுண் டாக்குகிறது. அவன் ஸ்மரணையற் றிருக்கையில் அந்தக் கோட்டையிலுள்ள காப்டென் உருத்திரப்பன் தன் ஆட் களைக்கொண்டு அவனைக் கோட்டைக்கு எடுத்துச் சென் ருன். அது கூட அவ்வளவு கோபமூட்டத்தக்கதல்ல. அந்தப்பயல் என்னை மிக்க அலட்சியமாகப்பேசினுன்" என்ருன்.

பிரேமநாதன்:—"சே சே. இதுமிக்க அக்கிரமம். நல்ல மனுஷனுக்கு இப்படிப்பட்ட கெடுதிசெய்து அவ னுக்குக்கிடைக்கும் இலாபத்தை..." என்பதற்குள்.

ஹோட்டல்காரன்:—"நான் என்ன இவ்வளவு தாராள மாய்ப் பேசுகிறேன். ஐயையோ" என்ருன்.

பிரேமநாதன்:—என் அக்கோட்டையைப்பற்றி பேசுவது அவ்வளவு பாபமா?

ஹோட்டல்காரன்:—பாப மல்லாவிட்டால் ஆபத்து, உயி ருக்கே ஆபத்து! முன்னே ஒரு பயங்கரமான கப்பற் சேதம் நேரிட்டதே தெரியுமா?

பிரேம:—அப்போது நான் இங்கில்லை. அப்போதுகூட அந்தக் காப்டென் இப்படித்தான் செய்தானே?

ஹோட்டல்காரன்:—அப்போது இரண்டு பேர் காப்பாற் றப்பட்டார்கள்...

பிரேம:—"ஆம் ஆம். ஒருநாள் நீ கூறியபோது கேட்

டேன். அவர்களேயும் காப்டென் கொண்டுபோய் விட்டதாகவும், அவர்களில் ஒருவன் உயர்ந்த அந்தஸ்திலுள்ள பெரிய மனிதன் என்றும் கூறினே" என்பதற்குள்,

ஹோட்டல்காரன் பயத்தோடு "ஆம் ஆம். இச்சம்பாஷணே போதும் போதும். பகலில் இதற்குமேல் இன்னும் குடிப்பது எனக்குக் கெடுதியாகும்" என்முன்.

அச்சமயம் அறையின் கதவு திறக்கப்பட்டதும் ஒரு மனிதன் உள்ளே வந்தான்.

## 47-வது அத்தியாயம்.

பிரேமநாதனும் இராமநாதனும் சந்தித்தல்—கப்பற் சேதத்தின் கோரமான விவரம்—வெங்கலக் கோட்டையைப்பற்றிய மர்மங்கள்.

இப்போது ஹோட்டலுக்குள் வந்த மனிதன் சற்று நேரத்திற்கு முன் இலவணபுரி நாட்டிலிருந்து வந்த கப்பலில் அத்தீவிற்கு வந்து சேர்ந்த ஒரு பிரயாணி. அவனேடு கூட ஒரு வேலேக்காரன் அவனுடைய பெட்டி படுக்கை முதலியவற்றைத் தூக்கிக்கொண்டு வந்தான். அம்மனிதனுக்குச் சுமார் இருபத்தெட்டு வயதிருக்கும். ஹோட்டல்காரன் அவனேக் கண்டதும் "வாருங்கள் வாருங்கள்! தாங்கள் இப்போது வந்த கப்பலில் வந்தவர்கள் போலும். அடடா! நான் துறைமுகத்திற்கு வந்திருந்து உங்களே யழைத்து வராமல் மூடன்போ லிருந்து விட்டேனே. இங்கு யாவும் முதற்றரமானவைகளே நாணயமாக அலங்கரிக்கப்பட்ட அறை யிருக்கி-

இதோ நமது பிரேமநாதம் பிள்ளையவாள் சுமார் இரண்டு மாதகாலமாக இங்கு போஜனம் செய்கிறார். இவர் யாவும் கூறுவார்" என்றான். வந்த மனிதன் பிரேமநாதன் என்ற பெயரைக்கேட்டதே அவனை யுற்று நோக்கிவிட்டு ஹோட்டல்காரனை நோக்கி "என் ஆட்காரனை யழைத்துப்போய் எனக்காகத் தாங்கள் ஏற்பாடு செய்யும் அறையில் விடுங்கள்" என்றான். ஹோட்டல்காரன் ஆளை யழைத்துக்கொண்டு மேல் மாடிக்குச் சென்றதும் வந்த மனிதன் பிரேமநாதனை மிக்க ஆவலோடு நோக்கி "தய்வு செய்து என் தம்பி இலட்சுமணன், மேஜர் இலட்சுமணன் உயிரோடிருக்கிறானா சீக்கிரம் கூறும்" என்றான்.

பிரேமநாதன் "அவர் உயிரோடிருக்கிறார். இனி இங்கே ஒரு வார்த்தைகூடப் பேசவேண்டாம். நான் அறிமுகமானவன்போல் காட்டிக்கொள்ளவே வேண்டாம் இரவு சரியாக ஒன்பது மணிக்குத் தாங்கள் கப்பலிலிருந்து கரையிறங்கிய விடத்திற்குக் கிழக்குப் பக்கம் சுமார் நூறு கெஜதூரத்தில் பனைமரம்போல் உயரமாகவும் நுனி மெல்லிதாகவும் இருக்கும் ஒரு பாறையிருக்கிறது; அங்கு வந்து என்னைச் சந்தியுங்கள். இவ்வளவே. ஹோட்டல்காரன் வருகிறான். இனிப்பேசவேண்டாம்" என்றான்.

பிறகு வந்தவன் சிற்றுண்டி படைக்கும்படி கேட்டான். ஹோட்டல்காரன் அதற்காக உள்ளே சென்றபோது பிரேமநாதன் இராமநாதனை நோக்கி "உமது பெயரை வெளியிடவேண்டாம்; மாறு பெயர் வைத்துக் சொல்லும்" என்றான்.

இராமநாதன்:—"ஒரு சமயம் என் வேலைக்காரன் முன்னமே கூறிவிட்டிருந்தால்?" என்றான்.

…ாதன்:—நான் சென்றதே …தையறிந்து கொண்டு

அவன் கூறிவிட்டிருந்தால் உடனே ஹோட்டல்கார னிடம் இரண்டு மூன்று பவுன்களைக் கொடுத்து "சில காரணங்களுக்காக என் பெயர் இங்கே வெளியாக லாகாது என்று கூறினல் அவன் வெளியிடான்!" என்றான்.

ஹோட்டல்காரன் ஆகாரங்கொண்டு அறைக்குள் வந்ததே அவனிடம் பிரேமநாதன் கூறிவிட்டுச் சென்றான்.

அன்றிரவு காற்று மும்முரமாகவே யடித்துக்கொண்டிருந்தது. இராமநாதன் மனம் பிரேமநாதனைச் சந்திக்கும் வேளையையே மிக்க ஆத்திரத்தோடு எதிர்பார்த்துக் கொண் டிருந்தது. ஆகையால் மிக்க குளிராக விருந்தும் அவன் ஒரு போர்வையைப் போர்த்துக் கொண்டு குறித்த விடத்திற்குச் சென்றான். பிரேமநாதன் கூறிய குறிப்பின்மர்மங்களால் இராமநாதன் மனம் மிக்க திகில்கொண்டிருந்தது. அவன் அப்பாறையருகிற் சென்றதே அதனருகிலிருந்த மறைவான விடத்திலிருந்து பிரேமநாதன் அவன் எதிரில் வந்து, "ஆ! வந்து விட்டீரா? உமது வேலைக்காரன் உமது பெயரைக் கூறிவிட்டானே?" என்றான். இராமநாதன் "ஆம். அதனல் கெடுதிவருமென்று அவன் அறியான். ஆயினும் நீர் கூறியபடி ஹோட்டல் காரனுக்கு மூன்று நான்கு சவரன்களை யளித்துச் சரிப்படுத்தினேன். இனியாவது என் தம்பி எங்கிருக்கிறான் கூறும்" என்று ஆவலோடு கேட்டான். பிரேமநாதன் "உமது தம்பி உயிரோடேயே யிருக்கிறான் வெண்கலக் கோட்டையில் சிறையாக விருக்கிறான்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே இராமநாதன் இடிவிழுந்தவன் போலாகி "அய்யோ! சிறையிலா? என் நீங்க... அக்கோட்டையைப் [பற்]றி பேசும்போது பயத்[...]

மிக்க மர்மமாகவும் பேசுவதைப் பார்த்தால் எனக்கு உள்ளத்தில் பெருந்திகில் உண்டாகிறது. அய்யோ என் தம்பி!...'' என்றபோது,

பிரேமநாதன்:—இங்கே தம்பி முதலியவார்த்தையாவது பெயராவது கூறவேண்டாம். நீர் என்ன காரியமாக வந்திருக்கிறீர் என்பதைப்பற்றி எள்ளளவு சந்தேக முண்டாயின் பெருமோசமாய் முடியும். இங்கடிக்கும் காற்றுகூட ஒரு சமயம் சங்கதியை அக்கோட்டையில் கொண்டு போய்ச் சேர்த்துவிடும் என்று அஞ்சவேண்டும்'' என்றான்.

இராமநாதன்:—என் தம்பியைப்பற்றி எப்போது கடைசியாகக் கேள்விப்பட்டீர்?

பிரேமநாதன்:—"நேற்று காலை அவன் க்ஷேமமாகவிருக்கிறானென்பதைக் கேள்விவிப்பட்டேன். கப்பற் சேதத்தைப்பற்றி கேள்விப்பட்டீரல்லவா?'' என்றான்.

இராம:—"ஆகா ஏழெட்டு நாட்களுக்கு முன்பே கேள்விப்பட்டேன். அதன் விபரம் ஒன்றுமே தெரியாது'' என்றான்.

பிரேமநாதன்:—"அக்கப்பற் சேதத்தினின்று மூவரே யுயிர் தப்பியவர்கள். அவர்களில் எனக்கு மிக்க வேண்டியவர் ஒருவர், உமக்கு வேண்டியவர் ஒருவர், இருவரும் அங்கு சிறையாக்கப்பட்டிருக்கிறார்கள்'' என்றான்.

இராமநாதன்:—மூன்றாவதாள்? என்றான்.

பிரேமநாதன்:—மூன்றாவது ஆள் நான்றான். நடந்த சங்கதியை சுருக்கமாகக் கூறுகிறேன். அப்போது தான் உமக்கு விளங்கும். அந்த பயங்கரமான

இரவு கொந்தளிக்கும் கடலில் கப்பல் தத்தளித்துக் கொண்டிருந்தது. காற்று மும்முரமாக வீசிக்கொண் டிருந்தது. கப்பல் திடீலென்று ஒரு பாறையில் மோதிப் பொடிப்பொடியாகப் போய்விட்டது. நான் கடலில் விழுந்துத் தத்தளித்தேன். கடைசியில் கை கால் ஓய்ந்து அமிழ்ந்து விட்டேன். அதே யெனக்குக் கடைசியாக நினைவிருந்தது.

எனக்கு ஸ்மரணை வந்தபோது ஒரு சாதாரணமான சிறு மஞ்சத்தில் நான் படுத்துக்கொண் டிருக்கிறேன். நான் இருந்தது ஒரு ஏழை வீட்டிலிருந்த ஒரு அறை. அங்கொரு தீபம் மினுக்கு மினுக்கென்று எரிந்துகொண்டிருந்தது. ஒரு கிழவனும் கிழவியும் பரிதாபமான பார்வையாக என்னைப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். அவர்களே அவ்வீட்டி லிருந்தவர்கள்; அவர்கள் எனக்கு அன்போடு உபசாரம் செய்து ஆகாரமளித்தார்கள்; அவர்கள் கூறியதால் நான் எவ்வாறு காப்பற்றப்பட்டேன் என்பதை நானறிந்தேன். அக்கிழவன் பெயர் சங்கரம்பிள்ளை.

அக்கிழவன் தன் வேலையிலிருந்து கடலோரமாகவே வீட்டிற்கு வந்துகொண் டிருந்தான். அப்போது, கப்பல் கடலில் தத்தளித்துக்கொண் டிருப்பதையும் கோட்டையிலிருக்கும் ஆயுதபாணிகளாகிய ஆட்கள் கடலோரத்தில் இருப்பதையும் பார்த்துக்கொண்டே வரும்போது, திடீலென்று ஒரு பயங்கரமான சத்தத்தைக் கேட்டதும் கப்பல் பாறையில் மோதிக்கொண்டு அழிந்ததையும் அப்போது ஜனங்கள் கடலில் விழுந்து தத்தளிக்கும் பரிதாபமான நிலைமையையும் கண்டு அவன் மனம் பதைத்தது. ஆனல் ஜனங்களைக் காப்பாற்றப் போதுமான ஆட்களிருந்ததால் அவ்வயோதிகன் பேசாமல் வந்துகொ-

டே யிருக்கையில் சவம் போன்ற ஒரு உருவம் அலை யால் தன் கால்களுக்கருகில் கொண்டு வந்து தள்ளப் பட்டதைக்கண்டு, பின்னால் வரும் அலை அம்மனிதனை மறுபடி கடலுக்கு இழுத்துக்கொண்டு செல்லும் சமயம், தன் பிராணனுக்குத் துணிந்து பாய்ந்து அவனைப் பிடித் துக்கொண்டு கடலோரத்தில் அருகிலிருக்கும் தன் குடிசை வீட்டிற்குத் தூக்கிச் சென்றான்.

மறுநாள் காலை பொழுது விடிந்ததும் அம் முதியோன் ஏதோ சாமான்கள் வாங்கிவரக் கடைவீதிக்குப் புறப் படும் சமயம் ஒருமனிதன் அறைக்குள் வந்தான். அவ னுக்கு வயது முப்பத்தைந்திருக்கும். அவன் அவ்வயோதி கர் புதல்வனென்றும், கோட்டையிலுள்ள காவலாளரில் ஒருவனென்றும், அவன் மிக்க இரகசியமாக அப்போது தன் வயோதிகப்பெற்றோரை வந்து பார்த்துவிட்டுப் போவதென்றும் பிறகு தெரிந்து கொண்டேன். அச்சம யம் நான் கண்களைத்திறந்தவன் களைப்பால் மறுபடி உடனே மூடிக்கொண்டேன். அவர்கள் நான் நித்திரை செய்வதாய்க்கருதி தாராளமாகச் சம்பாஷிக்கத் தொடங் கினார்கள். அதைக்கேட்டதே நான் நித்திரை செய்வது போ லிருப்பதே மிக்க நல்லகாலமாயிற்றென்று தெரிந் தது. அதோடு அச்சம்பாஷணை நான் மிக்க ஆவலோடு கேட்கத்தக்கதாக விருந்தது.

பெற்றோர் நான் எவ்வாறு அங்கு வரநேர்ந்த தென் பதைப்பற்றி அவனுக்குக்கூறினார்கள். அவன் பெயர் கேசவன். அவன் அவர்கள் கூறியயாவும் கேட்டதும், "அப்படியாயின் இவனைப்பேசாமல் காப்டன் உருத்திரப் பனிடம் ஒப்பித்துவிட வேண்டும்" என்றான். தந்தை ஏன் என்று கேட்டதற்கு அவன், "ஏனெனில், கப்பலி லிருந்து காப்பாற்றப்பட்ட இருவர் தவிர இன்னும் வேறு

யாரேனும் உயிர்தப்பி யிருப்பதாகத் தெரிந்தால் அவர்களை யுடனே பிடித்துக்கொண்டு வரவேண்டும் என்று கட்டளையிடப்பட் டிருக்கிறது'' என்முன்.

தந்தை என் அப்படி என்றதற்கு கேசவன், “ஏனு! சீமாட்டிகளின் கட்டளை யவ்வாறு. அது என்னத்திற்கோ தெரியாது. ஆனால் அக்கட்டளைப்படி நடக்கவேண்டியதே'' என்முன். வயோதிகன் “அந்த இரண்டுபேர் யார்? என் அவர்கள் சிறையாக்கப்பட் டிருக்கவேண்டும்?'' என்று கேட்டதற்கு மைந்தன் அவர்களிருவர் நாமதேயங்களையும் கூறிவிட்டு, “அச்சீமாட்டிகளின் யோசனை என்னவோ அது எனக்குக்கொஞ்சமேனும் விளங்கவில்லை. ஆனால் அந்த இருவரும் சிறைவைக்கப்பட்டிருப்பது மட்டும் உண்மை. இந்தவாலிபன் மூன்றுவது சிறையாகப் போய்ச்சேருவான் உங்கள் க்ஷேமத்தைக்கருதி நீங்கள் இவனைக் காப்டெனிடம் ஒப்பித்துவிடவேண்டும். நான் ஆலசியம் செய்யாமல் அவனுக்குச் சங்கதியை யறிவித்து விடவேண்டும்'' என்று கூறிவிட்டுச் செல்ல அடியெடுத்து வைத்தான்.

நடந்த சம்பாஷணையைக் கேட்டதே எனக்குப் பெருந்திகிலுண்டாயிற்று. நான் வெளியிலிருந்தால் எப்படியாவது அந்த இருவரைவும் காப்பாற்ற முயற்சிசெய்யலாகும். நானும் சிறையாக்கப்பட்டால் எங்கள் மூவர்கதி எப்படி முடிந்தாலும் யாருக்கும் ஒன்றும் தெரியாமற்போம். இந்தச்சிந்தனை யென்மனதிலுதித்ததே என் களைப்பு மறந்து எனக்குத்தைரியமும் உற்சாகமும் உண்டாகி விட்டது. நான் தட்டென்றெழுந்து அவர்கள் பாதங்களில் விழுந்து என்னைக்காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டேன். வயோதிகர்கள் இருவரும் என் மேல் மிக்க இரக்கங் கொண்டார்கள். கேசவனே முதலில் இணங்க

வில்லை. கப்பலிலிருந்தபோது நேரிடும் கைச்செலவிற்காக என்னிடமே வேண்டிய பணம் அளிக்கப்பட்டிருந்தது. அந்தப்பணப்பையை நான் இடுப்பில் கட்டிக்கொண்டிருந்ததால் அது அப்படியே இருந்தது. நான் உடனே அதிலிருந்து நாற்பது ஐம்பது சவரன்களை யெடுத்து அவனிடம் கொடுத்தேன். பிறகு அவன் என்னைக்காட்டிக்கொடுக்காதிருக்கச் சம்மதித்தான்.

அதன் மேல் நான் அணிந்திருந்தஉடை நான் சிறை வைக்கப்பட்டிருப்பவர்களைச் சேர்ந்தவனென்று காட்டிவிடும் ஆதலால் அவ்வுடைகள் அழிக்கப்பட்டன. எனக்கு இந்த முரடான சாதாரண உடை வாங்கியளிக்கப்பட்டது. நான் சுமார் பத்துபதினைந்து நாட்கள் அந்த அறையை விட்டு வெளிச்செல்லவே யில்லை. பிறகு இலவணபுரியிலிருந்து ஒரு கப்பல் வந்தது. நான் அக்கப்பலில் வந்தவன் போல் வெளியில் புறப்பட்டேன். என் நோக்கமனைத்தும் அந்த இருவரையும் எவ்விதமேனும் மீட்கவேண்டு மென்பதே. எப்படி மீட்பது? முதலில் இலவணபுரிக்கு வந்து அதிகாரிகளிடம் கூறலாமென் றெண்ணினேன். ஆனல் சங்கரம்பிள்ளையால், அதனல் ஒரு பயனுமுண்டாகாதென்றும் அதற்கு மாருக அந்த இருவர்க்கும் உடனே ஆபத்து நேருமென்றும் தெரிந்து அந்த யோசனையை விட்டுவிட்டேன்.

அச்சண்டாளிகள் என்ன எண்ணங்கொண்டு அவர்களைச்சிறையில் வைத்திருக்கிருர்களோ அது சற்றும் விளங்கவில்லை. ஆனல் எந்த நிமிஷமேனும் அவர்கள் பிராணனுக்கு ஆபத்து நேரிடக்கூடுமென்பது உண்மை. அவர்களை மிக்க தந்திரமான சாமர்த்தியத்தால் காப்பாற்றினல் காப்பாற்றலாமே யன்றி வேறு எவ்விதத்தா

லும் முடியாது. நான் ஐந்தாறுமுறை அக்கோட்டையை எச்சரிக்கையோடு சுற்றிப்பார்த்தேன். எவ்வளவு தூரத்திலிருந்தேனும் அவர்களில் ஒருவரைக்கண்டு ஏதேனும் ஒரு சமிக்கையாற் பேசினாலும், அவர்களைத் தப்புவிக்க ஏதேனும் உளவு அகப்படுமென்று கருதினேன். ஆனால் ஒருவரையும் காணவேயில்லை." என்றபோது,

இராமநாதன் "காவல் காரனாகிய கேசவனை வசியம் செய்யலாகாதோ?" என்றான்.

பிரேமநாதன்:—அந்தோ அது முடியாதகாரியமென்றே நினைக்கிறேன். நான் ஜாடையாகக் கேட்டபோது அவன் பயங்கரமான பார்வையாய் என்னை உற்று நோக்கினான். அவனே அங்குள்ள கடினமான சட்ட திட்டங்களுக்கு நடுங்கிக்கொண் டிருக்கிறான். அவன் துரோகம் செய்வதாகக் கொஞ்சம் சந்தேகமுண்டானால் அவன் உயிருக்கே யாபத்தாக முடியும். அய்யோ எனக்கு நன்றாகத்தெரிந்த இன்னொரு மனிதன் தங்கம் போன்ற வாலிபன்-மிக்க பெருந்தன்மையுடைய சுத்தவீரன். உலகநாயகன் தெரியுமா?

இராமநாதன்:—ஆகா! அவனுக்கென்ன?

பிரேமநாதன்:-கடந்த இரவு ஒரு கப்பற்சேதம் நேர்ந்தது. அதிலிருந்து ஒரு ஆள்தான் காப்பாற்றப்பட்டானென்று தெரிகிறது. அவனும் கோட்டைக்கு எடுத்துக்கொண்டு போகப்பட் டிருக்கிறான். அவன்றான் உலகநாயகன். நீ வேறுபெயர் வைத்துக்கொள்ள வேண்டும்; இன்றேல் நீ அங்கு சிறையிலிருக்கும் இலட்சுமணனுடைய சகோதரன் என்று கொஞ்சம் தெரிந்ததோ, நீயும் அங்குபோய்ச் சேரவேண்டியதே.

இராம:—என் பெயர் கிருஷ்ணன் என்று கூறும்படி ஹோட்டல்காரனிடம் சொல்லியிருக்கிறேன். நீ கூறும் பயங்கரமான விஷயங்களைக் கேட்டால் அக்கோட்டையில் மிகப் பயங்கரமான பெரிய மர்மங்களெல்லாம் இருக்கும்போல் காண்கிறதே. எனக்கொன்றுமே புலப்படவில்லை.

பிரேமநாதன்:-அந்தோ அதைப்பற்றிய பயங்கர விஷயங்களில் கால் பாகம்கூட நான் உன்னிடம் கூறவில்லை. அந்த விடத்தைப்பற்றி பேசுவதற்கே யாரும் பயப்படுகிறார்கள். அப்போது அவர்கள் பயங்கரமுகத்தோடு ஒருவரை யொருவர் பார்க்கிறார்கள். திடலென்று மனிதர் காணாமற் போய்விடுகிறார்கள். அவர்களைப்பற்றி யொன்றுமே வெளிப்படுவதில்லை. ஒவ்வொருநாளைக்கு இரவில் கோட்டையிலுள்ள நிலவறைக்கிடங்கின் உச்சியில் தீபவெளிச்சம் தெரிகிறது. அது காணப்படும்போது யாவரும் நடுக்கத்தோடு ஒருவரைப்பார்த்தொருவர் தலையசைத்துக் கொள்கிறார்கள். அப்போதவர்கள் முகத்தில் பெருந்திகிலும் துயரமும் தோன்றுகின்றன.

இராமநாதன்:—அய்யோ கடவுளே! இவற்றின் கருத்து தானென்னவோ. இத்தகைய பயங்கர மர்மங்கள் பெரிய குற்றங்களையே குறிக்கவேண்டும்.

பிரேமநாதன்:—"இவ்வளவிற்கும் ஒரு வார்த்தை கூடக் கூறுவதில்லை. என்னால் கூடியவரை முயன்று பார்த்தேன். ஒன்றும் கண்டறிய முடியவில்லை. இப்போது நான் அக்கிழவர்கள் வீட்டிலேயே யிருப்பது எனெனில், அப்போதைக் கப்போது சிறைப்பட்டிருப்பவர்களுடைய க்ஷேமத்தை யறிந்து கொள்ளலாமென்

பதற்கே. அந்த ஹோட்டலுக்குப் போஜனத்திற்குச் சென்று அங்குவ்ரும், போக்கிரிகள், துஷ்டர்கள். கள்ளப்பயல்கள் இவர்களோடு கூடி உண்பதால் அவர்கள் சம்பாஷணையால் ஏதாவது உளவு தெரிந்து கொள்ளலாம். அதனால் நம்மவர்களைக் காப்பாற்ற ஏதேனும் உதவியுண்டாகக்கூடும். இதுதான் என் யோசனை" என்றான்.

இராமநாதன்:—"ஆ! வாலிப நண்பரே. நான் உமக்கு என் நன்றியை யெவ்வாறு செலுத்தப்போகிறேன். நீ இங்கு இராவிட்டால் நான் சாதாரணமாய்ப் பகிரங்கமாகவே எதையும் விசாரிக்கத்தொடங்கி யிருப்பேன். அதனால் பெருமோசம் உண்டாகி யிருக்கும். நீ எத்தகைய ஆபத்திற்கும் அஞ்சாமல் அவர்களைக் காப்பாற்றத் துணிந்திருக்கிறாய். இப்போது நானும் வந்திருப்பதால் இனி இருவரும் ஆலோசித்து எதையும் செய்யலாம். இந்த ஊரிலுள்ள போக்கிரிகளில் சிலர் நமக்கு அனுகூலமாகக் கிடைத்தால் பணங் கொடுத்து அவர்களை வசப்படுத்திக்கொண்டு துணிந்து போய் நம்மவர்களை மீட்டுக்கொள்ளலாம். ஆ! அதென்ன வெளிச்சம்?" என்றான்.

பிரேமநாதன் அவன் சுட்டிக்காட்டிய திக்கைநோக்கி "ஆ! அதுதான் அப்பாதாளக்கிடங்கின்மேல் தோன்றும் தீபம்" என்று பயத்தால் தேகம் நடுங்கிக்கொண்டே இராமநாதன் தோளைப்பற்றினான்.

இராமநாதனும் பயத்தோடு அத்தீபத்தை யுற்றுநோக்கி "கடவுளே! இதென்ன விபரீதமான மர்மம். இந்த இரவில் இப்படி நடப்பது என்னகாரியமாக விருக்கும்?" என்றான்.

பிரேமநாதன்:—இச்சங்கதி இன்று இதோடு நிற்கட்டும். இனி யொரு வார்த்தைகூடப் பேசவேண்டாம். நாளை யிதேவேளைக்கு இதேவிடத்திற்கு வா'' என்றான்.

உடனே யிருவரும் அங்கிருந்து திரும்பித் திரும்பி அத்தீபத்தைப் பயங்கரத்தோடு பார்த்துக்கொண்டே சென்று பிரேமநாதன் கிழவர்கள் வீட்டை நோக்கியும் இராமநாதன் ஹோட்டலை நோக்கியும் பிரிந்து சென்றார்கள்.

---

## 48-வது அத்தியாயம்

உலகநாயகன் மனக்கலக்கமும் ஆபத்தும் துணிகரமான வீரச்செயலும்—உலகநாயகன் பாதாளக்கிடங்கில் அடைக்கப்படல்—பாதாளக்கிடங்கில் துளசிபாய் உலகநாயகனிடம் சம்பாஷித்தல்—பயங்கரமான நிபந்தனைகள்.

---

பிரேமநாதனும் இராமநாதனும் பாறையருகில் சந்திப்பதாய் ஏற்பாடு செய்து கொண்ட அதே ஒன்பது மணிக்கு நமது உலகநாயகன் சகோதரிகளிடமிருந்துத் தன் சயன அறைக்குச் சென்றானென்றும், அவன் சென்றதே சகோதரிகள் காப்டன் உருத்திரப்பனை யழைத்து மர்மமாய் ஏதோ செய்யும்படி கட்டளை யிட்டார்களென்றும் கூறினோ மல்லவா.

தன் சயன அறைக்குச் சென்ற உலகநாயகன் சயனித்துக்கொண்ட போதிலும் அந்த நிலைமையில் அவனுக்கு எப்படி யுடனே நித்திரை வரும். கன்னிகைகளின்

நடக்கைகளை யவன் உதாரகுணமுள்ள அன்பார்ந்த நடக்கைகளாகவே நம்பி யிருந்ததால் அவர்கள் விஷயத்திலாவது தன் நிலைமையைப்பற்றியாவது அவனுக்குக் கலக்கமில்லை. நாளை காலை நாம் கப்பலேறி இலவணபுரிக்குச்செல்வோ மென்றே நம்பியிருக்கிறுன். ஆனல் கப்பல் சேதத்தால் தான் போகக்கருதிய விடத்திற்குப் போகமுடியாமற் போய்விட்டதால், தன் மாமனரை யெவ்விதமாகக் காப்பாற்றுவதென்பதே அவனுக்குப்பெருங்கவலையாகிவிட்டது.

தன் பத்தினி தான் செல்லும் காரியத்தை முடித்துக்கொண்டு சந்தோஷ சமாசாரம் கொண்டு வருவதாக நம்பிக்கொண்டு ஆவலோடு தன் வரவை யெதிர்பார்த்துக்கொண்டிருப்பாளே. அவளுக்கு என்ன கூறுவோம் என்பது ஒரு பக்கம். தன் மாமனர் மேல் சமயோசித சாக்ஷியம் மிக்க கடுமையாக விருக்கிறது. அதோடு அவர் பெரிய கட்சியைச்சேர்ந்தவர் என்பதாலேயே அரசன் நியாயாதிபதிகள் முதலிய அனைவரும் அவரைத் தண்டிக்கவே கருதுவார்கள். ஆகையால் அவரைக் காப்பாற்றுவது சுலபமான காரியமல்ல; அவருக்கு மரணதண்டனை நேரிட்டால் தன் மனைவி மிக்க வியாகூலப்படுவாள். இத்தகைய துயரமான சிந்தனையில் அவன் ஆழ்ந்திருக்கும்போது அறையின் கதவு படீரென்று திறக்கப்பட்ட சத்தத்தைக் கேட்டதும் திடுக்கிட்டுக் கண்களைத்திறந்தான். காப்டென் உருத்திரப்பனும் அவன் ஆட்களில் ஆறுபேருமாகவந்து தன் படுக்கையைச் சூழ்ந்துகொண் டிருக்கக் கண்டான். மேஜையின் மேலிருந்த தீபவொளியால் அவர்கள் ஒவ்வொருவரும் கத்தி, ஈட்டி, கைத்துப்பாக்கி முதலிய ஆயுதங்களை யணிந்திருக்கிறுர்களென்று தெரிந்தது. அவர்கள் முகத்தில் குரூரமான பார்வை யிருந்தது.

அதற்குள் இதுகாறும் மிக்க மரியாதையோடு உலக நாயகனிடம் வார்த்தையாடிக் கொண்டிருந்த அக்காப்டன் "அய்யா சீக்கிரம் எழுந்து உமது உடைகளை யணிந்து கொண்டு எங்களோடுகூட வாரும்" என்றான்.

உலகநாயகன் கோபத்தோடு "இதென்ன துணிகரமான அக்கிரமம்?" என்றான். காப்டன் "இங்கு கேள்விகள் ஒன்றும் கேட்கவேண்டாம். பேசாமல் உடனே உடையணிந்து கொண்டு புறப்படும். இன்றேல் பலவந்தமாக அந்த வேலையை யென் ஆட்களே செய்வார்கள். ஆனால் அத்தகையவேலையில் அவர்கள் கொஞ்சம் முரட்டுத்தன முடையவர்கள்" என்றான். இத்துஷ்டர்களை யொன்றும் கேட்பதில் பயனில்லை யென்று உலகநாயகன் தெரிந்து கொண்டான். ஜாடையாய் நோக்கினான். இவர்களோ ஆறுபேரும் காப்டெனுமாக ஏழுபேர் இருக்கிறார்கள். தான் தப்பித்துக்கொண்டு போய்விட முயல்வதாய்த் தெரிந்தால் ஏககாலத்தில் யாவரும் மேலே பாய்ந்து பிடித்துக் கொள்வார்கள். அதோடு பின்னால் கதவிருக்கிறது. ஒருவினாடியில் இவ்வளவு விஷயமும் உணர்ந்து பேசாமல் உடைகளை யெடுத்து அணிந்து கொள்ளத் தொடங்கினான்.

உடைகளை யணிந்து கொண்டே "என்னை யெங்கே யழைத்துச் செல்கிறீர்கள்? அதுமட்டுமாவது கூறலாகாதா?" என்று இயம்பிக்கொண்டே தான் இடுப்பி லணியும் தோற்பட்டையை யெடுத்தான் அச்சமயம் காப்டன், "நீ யொருகேள்வியும் கேட்கலாகாது கேட்டால் விடை கிடைக்காது. உடனே உடையணிந்து கொண்டு சீக்கிரம் புறப்படும்" என்று அதட்டிக்கூறினான்.

உலகநாயகன் அச்சமயம் கையிலெடுத்த தோற்பட்

11

டையைச் சட்டென்று தன் இடதுகையின் மேல் சுற்றிக் கொண்டு "ஆ திருட்டுப்பயல்களே! என்றதும் நொடிக் குள் காப்டன்மேல் பாய்ந்து அவன் கரத்திலிருந்த உடை வாளைப்பிடுங்கிக்கொண்டு இடதுகரத்தால் அவனை யோங் கித்தள்ள அவன் பின்னுலிருந்த சுவரின்மேல் போய் மோதிக்கொண்டான். உலகநாயகன் இவ்வாறு செய்வா னென்று சற்றும் அவர்கள் எதிர்பாராதபடியால் இரண் டொருவினடி பிரமித்து நின்று விட்டார்கள். உலகநாய கன் அதற்குள் இன்னொருவனைக் காயப்படுத்தினன். மூன் ருவதொருவனை கீழே மோதி யடித்தான். உலகநாயகனு டைய வீரத்தையும் தைரியத்தையும் கண்ட காப்டன் கலக் கமடைந்து உடனே சீஷ்க்கை யடித்தான். உலகநாயகன் அதற்குள் இன்னொருவனைக் காயப்படுத்தினன். மற்றொரு வன் உடனே துப்பாக்கியை யெடுத்தான். காப்டன் "அட கோழைகளே! பாய்ந்து அவனைப் பிடித்துக்கொள்ளுங் கள். பத்திரம் அவனைக் காயப்படுத்தலாகாது" என்ருன். கடைசியில் இரண்டுபேரே காயம்படாமல் நின்றார்கள். உலகநாயகன் ஒரு பாய்ச்சலாகப்பாய்ந்து ஏககாலத்தில் இருவரையும் கையால் தரையில் வீழ்த்தி விட்டு கதவின் பக்கமாய் பாய்ந்து ஏககாலத்தில் இருவரையும் கையால் தரையில் வீழ்த்திவிட்டு கதவின் பக்கமாய் பாய்ந்து கத வைத் திறந்துகொண்டு வெளியில் அடியெடுத்து வைத் தான். அதேநிமிடம் காப்டனுடைய சீஷ்க்கையைக்கேட்டு ஓடிவந்த ஆறு வீரர்கள் உலகநாயகனைச் சூழ்ந்துகொண் டார்கள்.

உலகநாயகன் சுவரின் பக்கம் முதுகை வைத்துக் கொண்டு உருத்திர மூர்த்தியைப் போல் ஆவேசத்தோடு வந்தவர்களைத்தாக்கி இருவருக்கும் பயங்கரமான காயங் களை யுண்டாக்கினன். அதற்குள் அறையில் விழுந்தவர்

களில் காப்டெனும் இன்னும் இருவரும் சமாளித்தெழுந்து வந்து அவனைச் சூழ்ந்துகொண்டார்கள். அத்தனை பேரிருந்தாலும் உலகநாதனைப்பிடிப்பதற்குள் அவர்களில் பலர் விண்ணுலகம் சேர்ந்தே யிருப்பார்கள். ஆனால் அச்சமயம் அவன் காலிடறி வீழ்ந்து விட்டான். அதேவினாடி துளசிபாயும் பின்னால் அவள் சகோதரிகளுமாய் அங்கு வந்தார்கள் அவர்கள் சந்தடியைக் கேட்டு வந்தார்கள். துளசியாய் "அவரைத் தூஷணை செய்யவேண்டாம், கேலி செய்யவேண்டாம். அத்தகைய சுத்தவீரர் என் கண்களுக்கு இன்னும் கௌரவமுடையவரே" என்றாள்.

தான் ஒருவனாய் அத்தனை பேர்களிடம் சிக்கிக் கொண்டபின் உலகநாயகன் என்ன செய்வான். அவர்கள் உடனே அவன் கரங்களைப்பிடித்து முதுகின் பக்கம் வைத்துக் கட்டிவிட்டார்கள். அவன் அக் கன்னிகைகளை நோக்கி "ஓ சீமாட்டிகளே! நீங்கள் செய்த அவ்வளவு உதாரமான அன்பு பொருந்திய உபசாரமனைத்தும் வஞ்சகநெஞ்சத்தால் தானா? உள்ளத்தில் அநீதமான கபடசிந்தனை கொண்டு தானா? உள்ளே கொடிய அக்கிரம எண்ணங்களை வைத்துக்கொண்டுதானா மேலுக்கு அப்படி நயவஞ்சகமாக நடத்தினீர்கள். ஆ! நான் உங்களுக்குக் கடவுளறிய என்ன கெடுதிசெய்தேன். எள்ளளவேனும் அவமரியாதையாக நடந்துகொண் டிருப்பேனா? உங்கள் மனசாட்சிக்கு இது உறுத்தவில்லையா?" என்று கூறும் போது, அச்சமயம் அவர்கள் முகங்களில் தோன்றிய கடினகுணத்தையும், பிடிவாதமான ஒருவித முரட்டுத்தீர்மானத்தையும் கண்டதே அவன் மலங்கலங்கி தட்டென்று பேசுவதை நிறுத்தி விட்டான்.

ஆனால் துளசிபாயின் முகத்தில் மட்டும் குரூரமான பார்வை மிக்க குறைவாகவே யிருந்ததோடு ஒருவித

இரக்கமான பார்வை கலந்திருந்தது. ஆனால் அவளும் தன் தமக்கைகளைப்போலவே, கடினமானசித்தமும், கொண்ட தீர்மானத்தை நிறைவேற்றும் பிடிவாதமுமுள்ளவளான தால், அவள் மனதின் எண்ணத்தை யவள் முகம் வெளி யிட்டது. ஆகையால் அவள் கருத்தையுணர்ந்த உலகநாய கன் "ஆ துளசிபாய் பேஷ், உன் தேன் போன்ற வார்த் தைகளில் கொடிய விஷம் இருந்ததென்று யோக்கியனும் பெருந்தன்மையுடையவனுமாகிய ஆடவன் எவனும் கருத மாட்டான்" என்றான்.

துளசிபாய்:—"அப்பா! உம்முடைய உயிருக்கு இப் போதே ஒரு ஆபத்தும் நேராது. ஆனால் இனி மேல் நடக்கும் உம்மைப் பற்றிய விஷயம் உமது நடக்கையைப் பொறுத்ததாக விருக்கும்" என்றாள்.

உலகநாயகன் "ஆ! என்னைக் கொல்வதாயின் உட னே கொன்றுவிடுங்கள். எனக்கு என்ன நேர்ந்தாலும் நேரிடட்டும். கடலில் மடிய விருந்த ஒருவனைக் காப்பாற் றுவதாக வெளிக்குக் காட்டிக் கொண்டுவந்து இத்தகைய கொடிய அக்கிரமம் செய்வது உங்களுக்கு என்றென்றைக் கும் உலக அபவாதத்தையும் கடவுளின் தண்டனையையும் சத்தியமாக உண்டாக்கும் என்று நம்புங்கள்—ஓ பாதகி களே! நீங்கள் சீக்கிரம் அழிவீர்கள்" என்றான்.

துளசிபாய்:—"காப்டென்! ஏன் நிற்கிறீர்கள் செல்ல வேண்டிய விடத்திற்குச் செல்லுங்கள்" என்றாள்.

உடனே காப்டெனும் இன்னும் மூன்று ஆட்களும் உலகநாயகனை நடத்திக்கொண்டு சென்று சுழல்படிக்கட்டு களின் வழியாக வேறு மாடிக்கு மேலுள்ள உச்சித்தளத் திற்குச் சென்றார்கள்.

உலகநாயகன் இனி பேசுவதில் பயனில்லை யென்

றுணர்ந்து மௌனமாகத் தைரியத்தோடு சென்றான். "இவர்கள் நம்மை எங்கு கொண்டு போகிறார்கள்? பாதாளகிடங்கில் சிறைவைப்பதாயின் கீழ் நோக்கிச் செல்ல வேண்டுமே" என்று தனக்குள் சிந்தித்துக்கொண்டே சென்றான். இவர்கள் உச்சிக்குப்போய் சேர்வதற்குள் இன்னும் மூன்று வீரர்களும், அம்மூன்று சகோதரிகளும் இரண்டு தீவட்டிகளோடு அங்குவந்து சேர்ந்தார்கள்.

இவர்கள் உச்சியிலுள்ள கதவைத் திறந்துகொண்டு மேல் தளத்தில் ஏறியதும், அங்கு இராட்டினம் இருக்கும் மூலைக்குச் சென்றார்கள். உலகநாயகனுக்கு விஷயம் ஒன்றும் புலப்படவில்லை. ஆனால் இரண்டொரு நிமிடங்களுக்குள் விஷயம் விளங்கி விட்டது. அம்மூலைக்குச் சென்றதே அங்கு இருந்த நாற்காலி, இராட்டினம் இவைகளையும், கீழேயிருந்த கதவை ஒரு காவலன் திறந்ததே அங்கு கிணறுபோல் இருந்த பாதாளத்திற்குச் செல்லும் வழியையும் கண்டபோது உலகநாயகன் சங்கதியறிந்து கொண்டான். அவன் என்னதான் தைரியமுடையவனாயினும் அவன் உளம் நடுங்கியது. தன் பிராணனை யிழக்க அவன் அஞ்சவேயில்லை. ஆனால் இவ்வளவு பயங்கரமான மர்மமாகத் தனக்கு மரணம் நேர்ந்தால் தன் மனைவி ஒரு பக்கம் தந்தையை யிழப்பதோடு, ஒரு பக்கம் கணவன் போனவழியும் தெரியா விட்டால் என்ன துக்கப்படுவாளோ வென்பதே அவன் மனதிற்கு மிக்க துயரத்தையுண்டாக்கிற்று.

அவன் அம்மாதரை நோக்கி "சீமாட்டிகளே! இப்போது நீங்கள் செய்யும் கொலை ஒன்றல்ல. ஒரு பிராணனல்ல, இரண்டு—உங்களைப் போன்ற ஒரு ஸ்திரீயாகிய என் மனைவியையும் கொல்வதுபோலவே. இத்தகைய

பிசாசு—இராக்ஷச சுபாவமான கொடும்பாதகத்தைச் செய்யுமுன் நன்ருய்ச் சிந்தியுங்கள். இதற்குத் தண்டனை இவ்வுலகிலேயே யுங்களைத் தொடராவிட்டால் மறுவுலகில் பற்றிக்கொள்வது சத்தியம்! சத்தியம்!!" என்ருன்.

துளசிபாய் "உமது பிராணனுக்கு உடனே ஒரு ஆபத்தும் உண்டாகாது என்று மறுபடி கூறுகிறேன். கடைசியில் உமது க்ஷேமம் உமது நடக்கையைப்பொருத்ததே" என்ருள்.

உலகநாயகன் இம்மாதர்கள் கன்மனப் பேய்களேயன்றி மாதரல்ல என்று தீர்மானித்துக்கொண்டு மௌனமாய் விட்டான். கர்னலும் அவன் ஆட்களும் உடனே அவனை அந்த நாற்காலியில் உட்காரவைத்து அதிலிருந்த தோற்ப்பட்டைகளால் அவன் கரங்கள் கால்கள் மார்பு முதலியவைகளைச் சேர்த்துக் கட்டிவிட்டார்கள். காப்டெனும், இன்னொரு ஆளும் நாற்காலியின் பின் பக்கம் அதற்கென்று விடப்பட்டிருந்த விடத்தில் நின்று கயிற்றைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டார்கள். உடனே நாற்காலி கிணற்றின் வாய்க்கு நேராகத் தள்ளப்பட்டதும் எந்திரத்திலிருந்த சக்கரம் இரண்டு ஆட்களால் சுழற்றப்பட்டது. நாற்காலி உடனே அப்பாதாளத்தில் இறங்கத் தொடங்கியது. மேலிருப்பவர்கள் இரண்டு தீவட்டிகளையும் அப்பாதள வழிக்கு நேராகப் பிடித்தார்கள். நாற்காலி இறங்கி கொண்டே சென்றது. போகப் போக மேலிருக்கும் வெளிச்சம் குறைந்து கொண்டே கடைசியில் நாற்காலி தரையில் வந்து நின்றது. அங்கிருந்து பார்க்கப்பட்டபோது, மேலிருந்த பந்தத் தீபம் மங்கலான சிறு விளக்குப்போல் தோன்றியது.

கீழே எவ்வித [illegible]வெளிச்சமுமில்லை. நாற்காலி தரை

யில் நின்றதே உலகநாயகன் அதிலிருந்து அவிழ்க்கப்பட்டான். அங்கு பெரிய கட்டிடம் இருக்கிறதென்று மட்டும் அவனுக்குத் தெரிந்ததேயன்றி வேறொன்றும் புலப்படவேயில்லை. இரண்டு பேர் அவன் தோள்களைப்பற்றிச் சுமார் இருபது கெஜதூரம் அவனை யழைத்துச் சென்றார்கள். அவர்களுக்கு அந்த விடத்தின் ஒவ்வொரு அங்குலமும் இருட்டிலும் நன்றாய்த் தெரியும். அங்கு செல்லும்போது தன் கைக்கட்டுகளிலுள்ள கயிற்றை யக்காவலர் என்னமோ செய்வதுபோல் உலகநாயகனுக்குப் புலப்பட்டது. ஒரு விடத்தில் கொண்டுபோனதும் அவர்கள் அவனை நெட்டி முன்னே தள்ளிவிட்டார்கள். அதே சமயம் அவன் கைகளைக் கட்டியிருந்த கயிறும் நழுவிட்டது.

உலகநாயகன் மிக்க ஆத்திரத்தோடு திரும்பியபோது ஒரு பலமான கதவு மூடப்படும் சத்தம் கேட்டது. அவன் பாய்ந்து சென்றபோது தடித்த இரும்புக்கம்பிகள் அவன் கரங்களுக்குப் புலப்பட்டன். அந்தவிடம் இருள் சூழ்ந்திருந்தது.

மறுநாள் இரவு ஒன்பது மணிக்குப் பாதாளக்கிடங்கின்மேல் மறுபடி தீபவொளி தோன்றியது. மறுபடி நாற்காலி பாதாளத்திற்குள் இறங்கியது. இம்முறை நாற்காலியில் உட்கார வைக்கப்பட்ட ஆள் துளசிபாய். அவள் அதில் கட்டப்படவில்லை. பன்முறை யவ்வாறு சென்றிருப்பதால் அவளுக்குப் பீதி தோன்றவில்லை. நாற்காலியின் பின்னால் உருத்திரப்பன் மாத்திரம் நின்றுகொண்டிருந்தான். அவன் கரத்தில் ஒரு பிரகாசம் பொருந்திய தீபம் இருந்தது. நாற்காலி தரையில் நின்றதும் துளசிபாய் அதினின்றும் கீழே குதித்துக் காப்டெனிடமிருந்த தீபத்தைக் கரத்தில் வாங்கிக்கொண்டு உலகநாயகனிருக்

கும் அறையை நோக்கிச் சென்றாள். அவள் கரத்தி லிருந்த தீபபிரகாசத்தில் அப்பாதாள கிடங்கின் அமைப்பு நன்றாய் விளங்கியது. அங்குள்ள கட்டிடம் சுமார் முப் பது கெஜ நீளமுள்ளதாய் மேலே வளைவான தளம் போடப்பட்டது. நீண்ட சந்து போன்ற அந்தக் கட்டிடத் தின் இருபுறங்களிலும் அறைகள் வகுக்கப்பட்டிருந்தன. அந்த அறைகளுக்குப் பலமான இரும்புக் கம்பிகள் மனி தன் கணுக்கை யளவு பருமனுள்ளவை, நாட்டப்பட்ட கதவுகள் இருந்தன. காற்று வருவதற்குப் போதுமான அகன்ற துவாரங்கள் மேலே யிருந்தன. துளசிபாய் ஒரு அறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றாள். அங்கு சுமார் நான்கடி தூரத்தில் வரிசையாக இரும்புக் கம்பிகள் நிலையாக நாட்டப்பட்டிருந்தன அதன் மறு பக்கம் சுமார் எட்டடி சதுரமுள்ள ஒரு அறை யிருந்தது. கம்பிகள் நாட்டப்பட்டிருந்த சுவர்போன்ற தடையின் ஒரு சிறுபாகம் கதவு போல் திறக்கக் கூடியதாக விருந் தது. இதற்குப் பூட்டு போடப்பட்டிருந்தது. வெளிக் கத விற்குப் பூட்டில்லை. வெறுந்தாழ்ப்பாள் மட்டுமே யிருந் தது. ஆனால் அது தடித்த தாழ்ப்பாள். இந்த அறைகளி லிருப்போர் தப்பித்துக்கொண்டு போகவேண்டுமாயின், நாற்காலி கீழிறக்கப்பட்டு அவ்வழியாகத்தான் மேலே றிச்செல்ல வேண்டும்; இதனால் அப்பாதாளச் சிறையி லிருந்து தப்பித்துக்கொண்டு போவது அசாத்தியமே யென்று நன்கு விளங்கும். துளசிபாய் வெளிக்கத வைத் திறந்து உள்ளே வந்ததும் அதை மூடிக்கொண்டு அதற்கும் உலகநாயகனிருக்கும் அறைக்கும் இடையி லுள்ள சந்தில் நின்று கையிலிருந்த தீபத்தை யங்கிருந்த ஒரு மாடத்தில் வைத்து ஒரு சிறு ஆசனத்திலுட்கார்ந்து உலகநாயகனை நோக்கினாள். அவன் முகம் வெளுத்து மிக்க

துயரமுற்றவனுகக் காணப்படினும் தைரியத்தை விட்டவனுகத் தோன்றவில்லை. அந்த அறை சுத்தியாகவேயிருந்ததோடு அதில் ஒரு மேஜை, ஒரு நாற்காலி, முகங்கழுவிக்கொள்ள ஒரு பாத்திரத்தில் ஜலம், ஒரு பெட்டியில் மாற்றியுடுக்க உடைகள் யாவும் இருந்தன. மேஜைமேல் இரொட்டியும் இன்னும் இரண்டு வித கறிவகைகளும், ஒரு புட்டியில் ஒயினும், ஒருபாண்டத்தில் சுத்தஜலமும் வைக்கப்பட்டிருந்தன. இரொட்டியில் மட்டும் ஒரு சிறு பாகம் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்ததே யன்றி மற்ற பண்டங்கள் அவனுல் தீண்டப்படவே யில்லை. துளசிபாய் வந்ததே உலகநாயகன் மிக்க ஆத்திரத்தோடு என்னமோ கூற எழுந்தவன் "சே இவள் என்ன கூறுகிருள், அவையாவும் முன்னே அறிந்து கொள்வோம்" என்று தன் மனக்கொதிப்பை யடக்கிக்கொண்டு மௌனமாக விருந்தான்.

துளசிபாய் சற்று பரிதாபமான பார்வையாகவே அவனை நோக்கிய போதிலும், அவள் மனதில் ஒருவிதப் பிடிவாதமான தீர்மானமே யிருக்கிறதென்று அவள் முகக்குறியால் தெரிந்தது. அவள் இரண்டொரு நிமிடங்கள் அவனை யுற்றுநோக்கியபின், "அய்யா! நடக்கும் விவகாரங்களால் இந்தவிடத்தில் தங்களுக்குக்கூடியவரையில் வேண்டிய சௌகரியங்களை யளிக்கவேண்டுமென்றே கட்டளை யிடப்பட்டிருக்கிறதென்பதை காப்டன் உருத்திரப்பன் மூலமாகத் தாங்கள் அறிந்துகொண் டிருக்கலாம்" என்ருள்.

உலகநாயகன் "'ஆம் இன்னும் வேண்டியது ஏதேனுமிருந்து கட்டளையிட்டால் அளிக்கக்கூடியவை யளிக்கப்படும்' என்று அவன் கூறினன். ஆனல் நான் என் சுயாதீனத்தை யடையவேண்டுமென்றபோது அதை யளி

க்க மறுத்து விட்டதால், அவன் முதலில் கூறியதும். இப்போது நீ கூறுவதும் யாவும் வாசாகயிங்கரியமே யென்று தெரிந்துகொண்டேன்" என்றான்.

துளசிபாய்:—இத்தகைய பெருமுயற்சிகள் எடுத்துக் கொண்டதற்கு ஏதோ ஒரு விசேஷமான கருத் திருக்கவேண்டுமல்லவா. அப்படியிருக்கத் தங்களை யுடனே வெளியில் விட்டு விடுவதாக விருந்தால் இவ் வளவுகாரியம் என் செய்யவேண்டும்? தாங்கள் என் நிபந்தனைக்கு ஒப்புக் கொள்வதாயின் இதிலிருந்து விடுதலையடைவீர்" என்றாள்.

உலகநாயகன்:—என்ன நிபந்தனை?

துளசிபாய்:—அதை வெளியிடுவதற்கு முன்னாடி நான் சில விஷயங்களைக் கூறவேண்டியிருக்கிறது. ஆகை யால் நீர் இப்போது நான் கூறுவதைத் தயவு செய்து நிதானமாகவும் கவனமாகவும் கேட்கவேண் டும். என் தந்தைக்கு நான் என் இரண்டு தமைக் கைகள் ஆகிய மூன்று பெண்களும் ஒரு புத்திரனும் இருக்கிறோம். எங்கள் தமையனுக்கும் எங்களுக் கும் கொஞ்சமேனும் மன ஒற்றுமையாவது பரஸ் பர வாஞ்சையாவது கிடையாது. இது எங்கள் சிறு வயதிலிருந்தே யிருப்பதால் இதற்குக் காரணம் இன்னதென்று கூறமுடியாது. எங்கள் தமையன் நெடுநாட்களாகவே இலவணபுரியிலும் பருதி புரத் திலுமாக வசித்து வருகிறான். இங்கு எப்போதே னும் வந்தால் இரண்டொரு வாரங்களே தங்குவான். அதனால், நாங்களே பூரண அதிகாரத்தையும் கை யாடி வருவதோடு வருமானம் யாவும் எங்கள் பிரி யப்படிக்கே யனுபவித்து வருகிறோம். இப்போது

எங்கள் தந்தை மிக்க வியாதியுற்றுத் தன் படுக்கையைவிட் டெழுந்து உலவக்கூடச் சக்தியில்லாத ஸ்திதியிலிருக்கிறார். அவர் திடீலென்று மரணமடைவாரேல், எங்கள் தமையன் இத்தீவின் காரியங்களை நடத்த ஒரு காரியஸ்தனை நியமகம் செய்வான். அதனால் எங்கள் அதிகாரம் அடியோடு போய்விடும். அதுமட்டுமல்ல வருமானத்தை நாங்கள் இஷ்டப்படி அனுபவிப்பதும் போய்விடும். கடைசியில் நானும் என் சகோதரிகளும் எங்கள் தமையனுடைய தயவுக்கு எதிர் பார்ப்பவர்களாக விருக்கவேண்டும் அவன் தயவு எத்தகைய இனிமையான தென்பதை நாங்கள் அறிவோம்." என்றபோது,

உலகநாயகன்:—"ஆகா! தெரிகிறது. நீங்கள் இப்போது முதலில் அன்பான உபசரணை காட்டிய விருந்தாளிகளை யிப்போது பாதாளக்கிடங்கி லடைத்து அவர்களுக்கு எத்தகைய தயவு காட்டுகிறீர்களோ, அதைவிடச் சுமாராகவே யிருக்கும். இங்கு என்னை விட இன்னும் வேறு சிறையாளருமிருக்கிறார்க ளென்று தெரிந்து கொண்டேன்" என்றான்.

துளசிபாய்:—பொறும். சற்று பொறுமையாக முழுதும் கேளும். இங்கு வேறு ஆட்களும் உம்மைப் போல் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. காலை ஆட்கள் உமக்கு ஆகாரம் கொண்டு வந்தபோது வேறு அறைகளையும் திறந்து மூடியதால் நீர் அறிந்துகொண் டிருக்கலாம். நீர் இன்னம் சற்று நேரம் பேசாமலிருந்தால் நானே அதைக் கூறியிருப்பேன். இப்போது நான் கூறப்போகும் விஷயத்திற்கு அச்சங்கதியை வெளியிட வேண்டியது அவசியமே. நான் இப்போது கூறியபடி எங்கள்

தந்தை யிறந்து போனால் எங்கள் செல்வாக்கே யடியோடு அழிந்து போகும். ஆனால் நாங்கள் அதற்காகத் துணிகரத்தோடு ஒருகை பார்க்காமல் இத்தகைய பதவியை யிழந்து விடக்கூடிய அறிவிலிகளல்ல. இப்போது நான் கூறுவதைத்தான் மிகக் கவனமாய்க் கேட்கவேண்டும். இத்தீவின் வழக்கங்களிலும், ஆசாரங்களிலும் மிக்க அபூர்வமானவைகளும் சிலவுண்டு. முற்காலத்தில் இத்தீவை யாண்டுகொண் டிருந்த எங்கள் மூதாதை யொருவர்க்கு ஒரு புத்திரனும் மூன்று புத்திரிகளுமிருந்தார்கள். என்ன காரணத்தாலோ அவர் ஒரு விதி யேற்படுத்தினர். அதாவது தன் மூன்று புத்திரிகளும் தன் மரணத்திற்கு முன் ஏககாலத்தில் ஒரே நாளையில் ஒரே மணி நேரத்தில் மூன்று கண்வர்களை மணம்புரிந்து கொண்டால் அம்மூன்று புத்திரிகளும் தம் கணவர்களோடு ஏகோபித்து இத்தீவை யாண்டு வரலாம். எல்லா அதிகாரமும் எல்லா வருமானமும் அவர்கள் அனுபவிக்க வேண்டியதே. தன் புத்திரனுக்கு இத்தீவில் எவ்வித சுதந்தரமுமில்லை. என்றிவ்வாறு சட்ட மேற்படுத்தி விட்டார். உடனே புத்திரிகள் மூவரும் அவ்வாறே மூன்று கணவர்களை மணம் புரிந்துகொண்டு தங்கள் தந்தை மடிந்ததே இத்தீவின் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் தமையன் அது அநீதச் சட்டமென்று கூறி சேனைகளைச் சேர்த்துக்கொண்டு அவர்கள் மேல் சண்டைதொடுத்து தோல்வியடைந்தான் பிறகு மூன்று சகோதரிகளும் அவர்கள் கொழுனர்களுமே ஆண்டு வந்தார்கள். அத்தகைய சந்தர்ப்பம் இப்போது தான் உண்டாகியிருக்கிறது. இப்போது இங்கே எங்கள்

மூன்று பெருக்கும் மூன்று புருடர்கள் அகப்பட்டிருக்கிறார்கள்...'' என்றதே உலகநாயகன் மிக்க வெறுப்பும் ஆத்திரமும் கொண்டு,

''போதும் போதும், ஓ அயோக்கியமாதே யுன் வாயைமூடு. உங்கள் தீய எண்ணம்தா னென்ன? உங்கள் கருத்தென்ன? என்ன விபரீதமான அக்கிரமத்தை செய்வதற்காக நீங்கள் இந்த அநீதத்தை நடத்தத் துணிந்தீர்களென்பதை யறிந்துகொள்ள விரும்பியே நான் இந்நேரம் பொறுமையாக உன் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்தேனே யனறி உன்னிடம் சம்பாஷிக்கப் பிரியங்கொண்டல்ல. இத்தகைய அக்கிரமத்திற்கு நான் உடன்படே னென்பதற்கு உனக்கு வேறு காரணம் தோன்றாவிடினும் நான் முன்னமே மணம் செய்துகொண் டிருக்கிறேன் என்று கூறியது உன் புத்தியிற்பட்டிருக்க வேண்டாமா'' என்றான்.

துளசிபாய்:—''ஆத்திரப்படாமல் நிதானமாகக் கவனத்தோடு கேளும். தாங்கள் கலியாணம் செய்துகொண்ட சங்கதி முன்னமே தெரிந்து அதைப்பற்றிச் சிந்தித்திருக்கிறோம். இத்தீவில் எங்கள் தந்தைக்கு எல்லாச் சுதந்திரமான அதிகாரமு மிருக்கிறது. ஆகையால் மேல் கண்டபடி நாங்கள் மூவரும் மணம் செய்து கொண்டால் சர்வாதிகாரமு மடையலாகும் என்ற ஒரு பத்திரத்திற்கு அவர் கை யொப்பத்தைப் பெற்றுக்கொண்டிருப்பதோடு உமது முன் கலியாண பந்தத்தினின்று உம்மை விடுதலை செய்துவிட்டதாகவும் ஒரு பத்திரம் தயார் செய்யப்பட்டிருக்கிறது'' என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே உலகநாயகனுக் குண்

டான ஆத்திரம் சொல்லத் தரமானதன்று. அவன் கண்கள் சிவப்பேறி "போதும்! ஏ அக்கிரமத்திற் கஞ்சாத அயோக்கியமாதே! உன் தந்தை விவாக சம்பந்தத்திலிருந்து விலக்கும் மாது யார்தெரியுமா? அச்சம், மடம், நாணம், கற்பு என்னும் அரிய நான்கு இரத்தினங்களும் பதிக்கப்பட்ட ஒரு சிறந்த ஆபரணம் போன்றவள். உனக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்? ஒரு தேவலோக கன்னிகைக்கும், இக்கன்ம பூமியிலுள்ள அக்கிரமசிந்தனைகள் நிறைந்த, விஷப்பூச்சிபோன்ற ஒரு பெண்ணுக்கும் உள்ள வித்தியாசம் எத்தகையதோ, அத்தகைய வித்தியாசமே உனக்கும் என் மனைவிக்கு முள்ளது. கெம்பீரம் பொருந்திய அழகு வாய்ந்த கன்னிச்சிங்கத்தின் காதலாகிய அமிர்தத்தை யனுபவிக்கும் ஒருவீரகேசரி கேவலம் ஒரு பெண் கழுதைமேல் இச்சை கொள்ளுமோ..." என்றதே,

துளசிபாய் அவமானத்தாலும் கோபத்தாலும் பற்களால் உதட்டைக் கடித்துக்கொண்டு. "நீர் வைவது எனக்குச் சந்தோஷத்தையே யுண்டாக்குகிறது. ஆயினும் நீர் உன்னிப்பாக என் அழகை நிதானித்துப் பார்த்தால் உமக்கு என்மேல் காதலுண்டாகாமற் போகாது" என்பதற்குள்,

உலகநாயகன், "ஆ! நிறைந்த விஷமுள்ள நாகம் கூடக் கண்களுக்கு அழகாகவே யிருக்கிறது" என்றான்.

துளசிபாய்:—நான் அழகுடையவளென்றேனும் ஒப்புக் கொள்கிறாயல்லவா? இன்னம் போகப் போக எனக்கு உன்மேல் உண்மையாகவே காதலிருக்கிறதென்று தெரிந்தால் அப்போது நீ என்மேல் காதல் கொள்வாய்.

உலகநாயகன்:—சே சே உன் வாயால் காதல் என்ற பரிசுத்தமான உணர்ச்சியைச் சுத்த அபரிசுத்தமானதாகச் செய்து விடாதே. எனக்குச் சுத்த அக்கிரமமாக இத்தகைய தீங்குகளைச்செய்யும் உனக்கா மெய்க் காத லிருக்கிறதென்று நான் நம்புவேன்? ஒருக்காலுமில்லை " என்றான்.

துளசிபாய்:—"இன்றைக்கு இவ்வளவோ டிருக்கட்டும். நான் இன்னொரு வேளைவரும்போது உமது மனம் சாந்தமான நிலைமைக்கு வந்திருக்கும்..." என்றதே,

உலகநாயகன்:—"போதும் உன் கதையைக்கட்டு. உன் வார்த்தைகள் ஒவ்வொன்றும் நிறைய விஷம்வைத்த பெல்லம்போ லிருக்கிறது" என்றான்.

துளசிபாய்:—நான் மறுபடி கூறுகிறேன். சற்று சாந்தமாக விரும். இப்போது நான் உமக்குச்செய்யும் அனுகூலத்தைப்பாரும். நல்ல உயர்குலத்திலுள்ள ஒரு சுயாதீனமான அரசன் மகளை மணம்புரிந்துகொள்ளப்போகிறீர். வரையற்ற அதிகாரமும் திரண்ட செல்வமும் அனுபவிக்கப்போகிறீர். ஒரு மனிதன் விரும்பிக்கூடியது இதனினும் அதிகமாகவுள்ளது என்ன விருக்கிறது?

உலகநாயகன்:—ஆகா! ஒவ்வொன்றும் நெஞ்சுதிடுக்கிடும்படியான அக்கிரமத்தால் சம்பாதிப்பது. சரி உன்னோடு பேசுவதில் ஒருபயனுமில்லை. நீ என்ன கூறினும் கூறு. இனி என் வாயினின்று ஒரு வார்த்தை கூட வெளிவராது" என்றான்.

துளசிபாய்:—இன்னம் இன்றைக்கு ஒன்றும் கூறுவதற்கில்லை. நாளைக்கோ, இன்னும் ஒரு நாள் கழித்தோ வருவேன். அப்போது என் சம்பாஷணையைக்

கேட்க மிக்க பிரியப்படுவீர். இப்போது இரண்டொரு வார்த்தைகள் மட்டும் கூறுகிறேன். அவற்றை நீர் கவனத்தில் வைப்பது நலம். அதாவது, இருப்பவை இரண்டே நிபந்தனைகள். இவையிரண்டில் ஒன்றை நீர் ஏற்றுக்கொள்ள வேண்டியதே. நீர் என்னை மணம்புரியச் சம்மதித்தால் எல்லாம் திருப்தியாகவே நடைபெறும். அப்படிக்கின்றி என் தந்தை திடீலென்று மரித்தால், அவர் மரித்த ஒரு மணி நேரத்திற்குள் நீர் என்னை மணம்புரிந்து கொள்ள வேண்டியது. அப்படிக்கின்றேல் எங்கள் தலைமையனே சர்வாதிகாரி யாவான். ஆனால் அவன் அந்த நிலைமைக்கு வருமுன்னே இந்த இரகசியம் இப்படியே மறைந்து போவதற்காக நீங்கள் மூவரும் இச்சங்கதியை வெளியில் சென்று பிரஸ்தாபிக்காதபடி அடக்கிவிடப்படுவீர்கள். திருமணம் அல்லது மரணம், இரண்டிலொன்றே" என்று கூறிவிட்டு இரண்டு நிமிடங்கள் பேசாமல் நின்று தன் வார்த்தைகள் அவன் மனதில் உறுத்தினவா என்று நோக்கினாள். அவன் ஒன்றையும் சட்டை செய்யாமல், தான் கூறியபடி ஒரு வார்த்தை யேனும் கூறாமல், அவளை ஏறெடுத்துக்கூட பார்க்காமலே யிருந்தான். அவள் உடனே அறையைவிட்டுச் சென்றாள்.

## 49-வது அத்தியாயம்

பாதள அறைகளில் நடக்கும் விவகாரங்கள்—இராமநாதன் சிறைப்படல்—சில மர்மங்கள்—சண்பகமும் மேஜர் இலக்ஷ்மணனும்—சண்பகமும் அபூர்வமனிதனும்.

---

மூன் அத்தியாயத்தில் கூறிய சம்பவங்கள் நடந்த மறு நாளும் அதற்கடுத்த நாளும் ஒரு விசேஷமுமின்றிக் கழிந்தன. மூன்ருவது நாள் இரவு ஒன்பது மணிக்குக் கற்பகம் என்ற மூத்தவள் நாற்காலியின் வழியாகப் பாதாள கிடங்குக்குள் இறங்கினுள். காப்டென் உருத்திரப்பன் மட்டும் ஒரு தீபத்தை யெடுத்துக்கொண்டு அவள் கூடச் சென்ருன். கீழே போய் சேர்ந்ததும் கற்பகம் காப்டன் கையிலிருந்த தீபத்தை வாங்கிக்கொண்டு அறைகளுள்ள விடத்திற்குச் சென்ருள். காப்டன் நாற்காலியின்மேல் உட்கார்ந்து கொண்டு கயிற்றை யாட்டினுன். அச்சமிக்கையை யுணர்ந்து மேலே யிருந்த ஆட்கள் நாற்காலியை மேலே சேந்திக்கொண்டார்கள். பிறகு கற்பகம் அந்த நாற்காலி வழியாக இறங்கினுள். இப்போதும் உருத்திரப்பன் ஒரு தீபத்தோடு கூடவே சென்று சண்பகத்தினிடம் தீபத்தைக் கொடுத்து விட்டு மறுபடி மேலுக்கு வந்து துளசிபாயையும் கீழே கொண்டு வந்து விட்டுவிட்டு மறுபடி மேலுக்குச் சென்ருன்.

இப்போது காப்டென் தன் ஆட்களுக்கு ஒரு விதச் சமிக்கை செய்தான் அவர்கள் உடனே மேல் தளத்தில் இன்னொரு மூலேயில் இருக்கும் சுழல்படிகளின் வழியாக இறங்கி இரண்டு மூன்று கிடங்களுக்குள் ஒரு புதுமனிதனைப் பிடித்து வந்தார்கள். அவன் நாற்காலியில் கட்டப்பட்டு கிடங்கிற்குள் இறக்கப்பட்டான். இப்போது உருத்

திரப்பனும் இன்னொரு ஆளும் அவன் கூட இறங்கினர்கள். இம்முறை யவர்களிடம் தீபம் இல்லையாதலால் மூவரும் இருட்டிலேயே கீழிறங்கினர்கள். இந்த ஆள் மற்ற சிறையாளர்களைப்போல் உடனே ஒரு அறையில் அடைக்கப்படவில்லை. அவன் நாற்காலியிலேயே உட்காரவைக்கப்பட்டான். காப்டெனும் அவன் ஆளும் அவன் இருபுறங்களிலும் நின்றார்கள்.

இப்போது நாம், அறைகளுக்குச் சென்ற மூன்று சகோதரிகளில் சண்பகத்தை முதலில் கவனிப்போம். கற்பகத்திற்கு அவள் ஆளை வசப்படுத்துவதில் உள்ள கஷ்டத்தைக்காட்டிலும், தன் ஆளை வசப்படுத்துவதில் தனக்கு மிக்க குறைந்த கஷ்டமே யிருக்கிறதென்று சண்பகம் முன்னம் கூறியிருப்பது நண்பர்களுக்கு நினைவிருக்கலாம். சண்பகம் தீபத்தை யெடுத்துக்கொண்டு அங்கு வரிசையாக இருக்கும் அறைகளில் ஒரு அறைக்குள் நுழைந்தாள். அந்த அறையும் நாம் முன்பு விவரித்த உலகநாயகன் அறையைப்போன்றதே. சண்பகம், கம்பிகளுக்கும் வாயிற்படிக்கும் இடையிலுள்ள விடத்தில் நின்று கூண்டுபோ லிருந்த அறைக்குள் நோக்கினள். அதற்குள் உட்கார்ந்திருந்த மனிதனுக்கு வயது இருபத்தைந்து இருபத்தாறு இருக்கும். அவன் நல்ல அழகுடையவனே. அவன்றான் இராமநாதனுடைய சகோதரனாகிய இலக்ஷ்மணன். அவன் மேஜர் பதவியி லிருப்பவன். இராமநாதன் பாரிஸ்டர் பதவியிலிருப்பவன். இவர்க ளிருவர்க்கும் போதுமான செல்வமிருப்பதால் இவர்கள் ஜீவனார்த்தத்திற்காகத் தொழில் செய்யவேண்டிய அவசியமே யில்லை.

சண்பகம் அறைக்குள் வரும்போது இலக்ஷ்மணன் மிக்க முகவாட்டத்தோடும் துயரத்தோடும் தன் சிரசைக்

கரத்தின் மேல் சாய்த்து வைத்துக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான். அவள் வரவைக்கண்டதே திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான்.

சண்பகம்:—"இன்னும் துயரத்திலேயே யிருப்பதுபோற் காண்கிறது. உமது சுயாதீனத்தைப் பெறத்தக்க அந்த ஒரு வார்த்தையைக் கூறிவிட்டால் உடனே இதிலிருந்து விடுதலை பெறலாமல்லவா! இப்போது உமது மனம் என் நிபந்தனையை யேற்றுக்கொள்ளச் சம்மதமாக விருக்குமென்று கருதுகிறேன்" என்றாள்.

இலக்ஷ்மணன்:—"ஒருக்காலுமில்லை. ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன். எனக்கு உன் மேல் கொஞ்சமேனும் அன்புண்டாகாது. இதை முன்னமே கூறியிருக்கிறேன். ஆனால் நான் என் சுயாதீனத்தை யதிகமாக விரும்புகிறேன். அதைப் பெறுவதற்காக ஒரு சமயம் நான் உன் நிபந்தனைக்குச் சம்மதித்தால்..." என்று கூறிவிட்டு அதற்மேல் ஒன்றும் கூறாமல் மௌனமாக விருந்தான்.

சண்பகம் இவன் இணங்கிவிடுவான் என்று உள்ளத்தில் சந்தோஷங்கொண்டு "அப்புறம் முழுதும் கூறி முடியும். இப்போது நான் இவ்வாறு நடந்து கொள்வதனாலேயே எனக்கு உம்மேல் போதுமான அன்பில்லையென்று கருதலாகாது" என்றாள்.

மேஜர் இலக்ஷ்மணன்:-"என்ன என்ன? உனக்கா அன்பு? பேஷ் நல்ல அன்பு. நீயும் உன் சகோதரிகளும் உங்கள் சுயநலத்தைக்கருதி மணம் செய்துகொள்கிறீர்களென்று நான் அறியாமலா இருக்கிறேன். நான் இங்கு அடைக்கப்பட்ட முதல்நாளே நீ யச்சங்கதிகளை யெல்லாம் கூறி யிருக்கிறா யல்லவா. சே சே

உங்களுடைய கபடசிந்தனைகளும், அக்கிரம நோக்கங்களும், 'என்னை மணம் செய்து கொள்ள மறுத்தால் நீ கொல்லப்படுவாய்' என்று நீ கூறியதையும் நான் மறந்து விட்டேனா! உனக்கு என்மேல் அன்புண்டென்றுகூட நான் கனவிலாவது நம்புவேனா? சற்று முன்பு எனக்குச் சுயாதீனத்திலுள்ள பிரியத்தால் அவசரப்பட்டு என்னமோ கூறிவிட விருந்தேன். சிந்தித்துப்பார்க்கும்போது, சே சே! பேயினுங்கொடிய கன்மன முடைய உன்னை யொருபோதும் விரும்பேன்'' என்றான்.

சண்பகம்:—"அவசரப்படவேண்டாம். எங்கள் காரியம் நிறைவேற வேண்டியதற்காக நாங்கள் இப்படி நடந்துகொள்ள வேண்டியதாயிற்று. நீர் இங்கு வருமுன் நாம் வெளியில் எங்கேனும் ஒருவரை யொருவர் சந்தித்துக் காதல்கொண் டிருந்தால் இச்சம்பவங்கள் நேரிடுமென்று கருதுகிறீரா. ஒருபோது மில்லை. நீர் இப்போது என்னை எவ்வளவு தூஷித்தாலும் வைதாலும் என்னை மணந்து கொண்டால் பிறகு என்மேல் காதல் கொள்வீரென்பது நிச்சயம். அப்போது நீர் என்னை வைதது முதலிய யாவற்றிற்கும் உம்மை நான் மன்னித்து விடுவேன்'' என்றாள்.

இதைக்கேட்டதே இலக்ஷ்மணன் மிக்க கோபங்கொண்டு "ஓ பெண்பேயே! நீயா என்னை மன்னிக்கிறாய்? ஏன் நான் வைததும் தூஷித்ததும் உண்மையே. ஆனால் நீ எவ்வளவோ கோபமூட்டி யிருக்கிறாய்? உனக்கு ஒரு கெடுதியும் செய்யாத எனக்கு நீ செய்திருக்கும் கெடுதிகள் எத்தகையவை? அடடா. உலகத்தோடு சம்பந்தமில்லாமல் என்னைப் பிரித்துவிட்டாய். என்னைத் தனியறையில் அடைத்து விட்டாய். மிக்க கம்பீரமும் பெருந்தன்மை

யும் சத்தியமும் சுத்தவீரத்தன்மையுமுடைய புண்ணியபுருடரின் ஊழியத்திலிருப்பது எனக்கு எவ்வளவோ கௌரவம். நீ என்னை யவரிடமிருந்து பிரித்து விட்டாய். என் சுற்றத்தார் நண்பர்கள் இவர்களிடமிருந்து பிரித்து விட்டாய். ஓ இரக்கமென்பதை யறியாத மாதே என்னை யுற்றுப்பார். இந்த இரண்டு மாதகாலத்தில் என் தேகம் என்ன ஸ்திதி யடைந்திருக்கிறது? என்மனத்திடம் எவ்வளவு குன்றிவிட்டது? அடடா! ஒவ்வொரு சமயம் எனக்குப் புத்தி யடியோடு சபலித்துவிடும்போலிருக்கிறது..." என்றதே,

சண்பகம்:—"ஏன்? ஒரு வார்த்தை கூறி விட்டால் இவை யாவும் நீங்கி விடுமல்லவா. எப்படியும் நீர் என்னை மணம் செய்து கொண்டதே யிவையெல்லாம் பழங்கனவாய்ப்போம். இதற்கு ஈடாக என்னுல் நீர் அடையப்போகும் நன்மைகளைப்பாரும். இத்தீவிற்கு ஏற்படும் மூன்றரசர்களில் ஒருவராய் சர்வ அதிகாரமும் பெறப்போகிறீர். மணம் செய்துக்கொண்டதே உமது ஆளுகையின்கீழ் விடப்படும் சைனியத்தின் சேனதிபதியாய்க் கையில் வாளேந்தி யுத்தமுனைக்குச்சென்று வெற்றிபெருதுடன் திரும்பிவரும் கௌரவத்தைச் சிந்தித்துப்பாரும்..." என்றதே,

இலக்ஷமணன் கண்கள் சிவந்து, "ஆ ஆ! போதும் போதும் நீ கடைசியில் கூறியமொழிகளே என் கடமையின்னதென்பதை நன்ருய் விளக்கிவிட்டன. மறவாதபடி, மயங்காதபடி நினைப்பூட்டிவிட்டன. நான் சத்தியவானுகிய சுத்தவீரரிடம் இருப்பவன். கௌரவமான வேலைக்கே என் வாளை யுறையினின்று வெளியிலெடுப்பேன். அக்கிரமத்திற்கும் அநீதிக்கும், இன்னெருவருக் குரித்தான அதிகாரத்தை யக்கிரமமாக அபகரிப்பதற்கும் என் உடை

வாளேயுபயோகிக்கமாட்டேன். நீங்கள் மிக்க அக்கிரம மாக உங்கள் சொந்த சகோதரனுக்கே பெருந் துரோகம் செய்து அவன் ஆக்ஷிஃயை யபகரித்துக்கொள்ளக் கருது கிறீர்கள். இப்படிப்பட்ட அநீதிக்கு நான் உதவி செய்வே னென்று கனவிலும் கருதவேண்டாம். சே சே! நான் ஏதோ இளகிய மனமுடையவனைய்க் கண்மூடித்தனமாய்ச் சம்மதித்துக் கொள்ளக் கருதினேன். நான் உன்னை மணம் புரிவது ஒருபக்க மிருக்கட்டும். இந்த அநியாய மான முயற்சியில் நான் உங்களுக்கு உதவிசெய்யக் கன விலும் சம்மதியேன். சத்தியமும் நீதியும் தவறி அகௌ ரவமான வழியில் பிரவேசிக்க உடன்பட்டுச் சுயாதீனம் பெறுவது சுத்தவீரனுடைய இலட்சணமாகாது. அத் தகைய சுயாதீனமே வேண்டாம். என் உயிரைப்பற்றி எனக்கு இலட்சியமே யில்லை" என்றான்.

சண்பகம்:—"இந்த தீரம் முழுது மிராதென்று நானறி வேன். இதுகாறும் நான் சாந்தமாய்ப் பேசியது வீண். தீர்மானமாகக் கூறும். என் நிபந்தனைக்குச் சம்மதிகிறீரா அல்லது கொடிய மரணத்திற்குள்ளா கிறீரா?" என்றாள்.

இலக்ஷ்மணன்:-"நீ எப்படிக்கொன்றாலும் எனக்கு அனவ சியமே. என் உயிர் இப்போதே போய்விட்டதாகவே எண்ணிக்கொள்கிறேன். அதற்குமேல் நீ செய்யக் கூடியது ஒன்றுமில்லை. இப்போதே என்னைக் கொன் றாலும் சரி. நான் உன் வார்தைக்கு உடன்படேன்" என்றான்.

சண்பகம்:—என்னிடம் வேறு ஆயுதம் இருக்கலாகாதா? இப்போது நீர் என் நிபந்தனைக்குச் சம்மதியாவிட் டால் ஒரு உயிர் மட்டும் போகாது...

இலக்ஷ்மணன்:—அது தெரியும். என்னை யன்றி இன்னும் இருவர் இங்கு சிறையாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

சண்பகம்:—இப்போது நான் கூறுவது இவர்களைப்பற்றியல்ல. உமக்குப் பிரியமான சுற்றத்தார் நண்பர் யாருமில்லையோ? சகோதரர்...

இலக்ஷ்மணன்:—ஏன் அதைப்பற்றி யென்ன? எனக்கு ஒரு சகோதரன் இருக்கிறான். அவனைப்பற்றி யென்ன? உனக்கெப்படி யது தெரியும்?

சண்பகம்:—நீர் அன்று கூறினீரல்லவா? நாங்கள் வந்த கப்பல்சேத மடைந்த சங்கதியைக் கேள்விப்பட்டால் என் சகோதரன் மிக்க துயரமடைவான் என்று கூறினீரல்லவா?

இலக்ஷ்மணன்:—ஆம் ஆம். அவனைப்பற்றி யென்ன? அவன் எங்கள் நாட்டிலிருக்கிறான்.

சண்பகம்:—ஒரு சமயம் உமது சகோதரன் உயிரும்போவதானால் அப்போது கூடச் சம்மதிக்க மாட்டீரோ?

இலக்ஷ்மணன் மிக்க கலக்கமடைந்து "என்ன நீ கூறுவது? அவன் ஏன் இங்குவருகிறான். அவன் உன் கையில் சிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படாது.

சண்பகம்:—நீர் நிச்சயமாக அப்படியே நம்பக்கூடுமா. ஏன் உமது சகோதரன் உம்மைப்பற்றி விசாரிப்பதற்காக இங்கு வந்திருந்து என்னிடம் சிக்கிக்கொள்ளலாகாதோ? அப்படியே நேரிட்டதாக நிரூபித்தாலோ?

இலக்ஷ்மணன் மிக்க மனக்கலக்கமடைந்து "என்ன விபரீதம்? என் சகோதரன் ஏன் உன்னிடம் சிக்கிக்கொள்

கிறுன்? நீ என்ன அத்தாட்சி காட்டக்கூடும். சீக்கிரம் கூறு'' என்றுன்.

சண்பகம் உமக்கு நேரில் காட்டினுல் தான் தெரியும் என்று கூறி விட்டு, காப்டென் என்று கூவினுள். இரண்டொரு நிமிடங்களுக்குள் ஆட்கள் வரும் சத்தம் இலக்ஷ்மணன் செவியிற் கேட்டது. மறுவினுடி வெளிக்கதவின் பின் மூவர் வந்து நிற்பது தெரிந்தது. அக்கதவு வெறும் கம்பிகள் நாட்டப்பட்டதாகையால் தீபப்பிரகாசத்தால் அக்கம்பிகளின் விசாலமான சந்துகளில் மூவரில் மத்தியில் நிற்பவன் தன் சகோதரன் என்பதையறிந்த இலக்ஷ்மணன் மனம் பதைத்து. ஆ! கடவுளேயென்று பாய்ந்து போய் தன் அறையிலுள்ள கம்பிகளில் மோதிக்கொண்டான். இராமநாதனும் ஆவலோடு கம்பிகளின் சந்தில் கைநீட்டித் தன் சகோதரன் கரத்தைப் பற்றிக்கொள்ளப் பாய்ந்து வந்தான். ஆனுல் காப்டெனும் அவன் ஆளும் அவனை நகராதபடி பிடித்துக் கொண்டார்கள். இராமநாதன் தன் சகோதரனை நோக்கி "சகோதரனே நாம் சத்தியத்திற்காக நமது பிராணன்களைத் தியாகம் செய்வதற்கு அஞ்சலாகாது. நம்மை யக்கிரமமாகத் துன்புறுத்துவோர் பின்னுல் கடவுளுடைய பயங்கரமான தண்டனைக்குத் தப்பமாட்டார்கள்" என்றுன்.

சண்பகம் உடனே காப்டெனுக்கு ஒருவிதச் சமிக்கைசெய்ததே இராமநாதன் அங்கிருந்து பிடித்துக் கொண்டுபோகப் பட்டான். சற்று நேரத்திற்குள் ஒரு இரும்புக்கதவு சாத்தப்படும் சத்தம்கேட்டது.

சண்பகம் இலக்ஷ்மணனை நோக்கி "இப்போது உம்முடைய தீர்மான மென்ன'' என்றுள்.

இலக்ஷ்மணன் "நான் எல்லா நிபந்தனைக்கும் ஒப்புக்கொள்கிறேன். இனிப் பிரளுவதில்லை. எல்லா நிபந்தனைக்

கும் ஒப்புக்கொள்ளுகிறேன் சத்தியம்" என்றான். அதன் பிறகு சண்பகம், அவனைப் பரிதாபமும் அன்புடையது மான பார்வையாகப் பார்த்துவிட்டு அறையை விட்டு வெளியிற் சென்றாள்.

துளசிபாயின் விஷயத்தைப்பற்றி நாம் விவரமாகக் கூறவேண்டியதில்லை. அவள் என்ன சாமார்த்தியமாய்ப் பேசியும் உலகநாயகன் தன் பத்தினிக்குத் துரோகம் செய்யமாட்டேனென்றும், எத்தகைய சந்தர்ப்பம் நேரினும் யோக்கியதை யில்லாத மாதை மணம் புரியேனென்றும், அநீதமான செயல்களுக்கு உதவி செய்யமாட்டேனென்றும் கண்டிப்பாய்க் கூறிவிட்டான். முடிவில் "ஓ! பெண்வேடந் தரித்த இராக்ஷசப்பேயே. நான் உன் நிபந்தனைக்கு இணங்கேன். நீ எந்நேரம் பிரசங்கம் செய்யினும் நான் ஒரு வார்த்தை யேனும் இனி யுன்னிடம் பேசமாட்டேன். பிராணன் இச்சந்தர்ப்பத்தில் எனகொரு துரும்பு. என் முன்னால் நில்லாதே" என்று கூறிவிட்டான்.

இனி கற்பகம் தான் மணம் புரிய விரும்பிய புருடனிடம் என்ன பேசினாள் என்பதைக் கவனிப்போம். நேயர்களே கற்பகம் மணம்புரிய விரும்பிய ஆள் யாரென்று நீங்கள் இன்னும் அறியீர்கள். ஆயினும் அந்த ஆள் யாரென்றறிந்ததும் மிக்க வியப்படைவீர்கள். ஏனெனில் அந்த ஆள் நீங்கள் நன்குயறிந்த ஆளே. ஆயினும் அந்த ஆளின் மனோ நிலைமையைப்பற்றி உங்களுக்கு இன்னும் கூறப்படவில்லை. இங்கு அதை வெளியிட வேண்டியது அவசியமாக விருப்பதால் அதைப்பற்றி சுருக்கமாகக் கூறிவிட்டு மேல் நடந்த விஷயங்களைப்பற்றி கூறுவாம்.

அந்த ஆள் உலக சுகதுக்கங்களை யின்னதென்றறிந்தவன்; நாட்டிலும் ஜனசஞ்சாரமில்லாது கொடிய துஷ்ட

ஜந்துக்களும் விஷ ஜந்துக்களும் ஏராளமாக உள்ள அடவி களிலும் வசித்தவன். அத்தகைய சமையங்கள் ஒன்றில் அவன் ஒருஞானசொரூபியான மகானைக்கண்டு தரிசித்துத் தன் உண்மை நிலையை யுணர்ந்து, பிறருக்கு நன்மை செய் வதற்கும், அக்கிரமஸ்தர்களை யொழிக்கவும், உத்தமர்க்கு உதவிபுரிந்து அவர்களைக் காப்பாற்றவுமே உலகோடுகூடி வாழ்பவன்; சத்தியம் நீதி யிவற்றில் உறுதியான வைராக் கிய முடையவன். சுகதுக்கங்களைச் சமமாக அனுபவிப்ப வன். பயமற்றவன், எத்தகைய காரியமும் அவன் மன தைக் கலக்கமுடியாது. வலியவரும் பிராரப்தம் எவ்வளவு கொடியதாயினும் ஒரு இலட்சியமும் செய்யாமலே அதை யனுபவிப்பதோடு தன் கடமையைச் சலியாது செய்ப வன். அவனுக்கும் கற்பகத்திற்கும் நடக்கும் கீழ்க் காணும் சம்பாஷணையால் அவன் யாரென்பதும் அவன் மனோ நிலைமை எத்தகைய தென்பதும் இதை வாசிப் போர்க்கு விளங்குவதோடு மிக்க வியப்பையும் விளைவிக் கும்.

கற்பகம் இராந்தலை யெடுத்துக்கொண்டு மேல்கூறிய ஆள் இருக்கும் அறைக்குள் சென்றாள். இவன் மிக்க உறுதியான மனமும் வைராக்கியமு முடையவனென்றும் இவனை வயப்படுத்துவது மிக்க கஷ்டமாகுமென்றும் சகோதரிகள் பேசிக்கொண்டதைப்பற்றி முன்னமே கூறி யிருக்கிறோம்.

கற்பகம் அவனிருக்கும் அறைக்குள் செல்லும்போது, அவன் சற்றேனும் முகவாட்டமடைந்தவனாக வாவது, துயரமுள்ளவனாகவாவது, மனக்கலக்க முடையவனாக வாவது சற்றும் புலப்படவில்லை. பிராணபத்தென்ற பீதி யாவது திகிலாவது அவனுக்கு எள்ளளவுமில்லை. தனக்கு நேரிடுவது எதுவாயினும் அதைச் சற்றும் இலட்சியம்

செய்யாது, தன் மனதிலுள்ள தீர்மானப்படி நடக்கசித்த மாக விருப்பவன்போல் தோன்றினன். கற்பகம் "ஆகட்டும் இவனுடைய இரும்பு மனதை நான் எவ்விதத்திலேனும் ஒடுங்கும்படி செய்கிறேன்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு இரும்புக் கம்பிகளுக்கும் கதவுக்கும் இடையிலுள்ள விடத்தில் உட்கார்ந்து சற்று நேரம் அவனையுற்று நோக்கினள். அவனே ஒரு விசேடமும் காணுதவன்போல் பேசாமலேயிருந்தான்

கற்பகம்:—"இந்த விடத்தில் வாசம் செய்வது சௌகரியமாகவே தங்களுக்குத் தோன்றுவதுபோல் காண்கிறது" என்ருள். அம்மனிதன் சற்றேனும் கோபமாவது விசனமாவது வெறுப்பாவதின்றி அலட்சியமாகவே, "அப்படி நான் குறைகூறத்தக்கது ஏதேனுமிருப்பதாகத் தெரியவில்லை. பன்முறை துஷ்டஜந்துக்கள் நிறைந்துள்ள கானகத்தில் ஒரு மரத்தடியில் கட்டாந்தரையில் படுத்திருந்தவனுக்கு இந்த மஞ்சமும் படுக்கையும் தேவலோகம்போ லிருக்கிறது. ஆனல் கொஞ்சம் தாராளமான வெளிக்காற்றும், பகற்பொழுதின் பிரகாசத்தில் நடமாட்டமும் இருந்தால் கொஞ்சம் நலமாக விருக்கும். ஆனல் வினைப்பயன் கீழும் மேலுமாக மாறிமாறி வருவது சுபாவம். எங்கோ வசிக்கவேண்டியது தானே. வெங்கலக் கோட்டையின் பாதாளகிடங்கில் கொஞ்ச காலம் வசிப்பது ஒருவித மாறுதலே யாகும்" என்ருன்.

கற்பகம் ஒன்றும் பேசமுடியாமல் மனமுடைந்தவளாகி "இப்போது தங்களுடைய முடிவான அபிப்பிராயத்தைக் கூறவேண்டிய காலம் வந்து விட்டது" என்ருள்.

அம்மனிதன்:—"என் அபிப்பிராயம். ஒ ரிணைவிற்கு வர

தது. நான் உன்னை மணம் செய்து கொள்ளவேண்டும் என்ற விஷயமல்லவா? அப்படிப்பட்ட விஷயந்தான் எதுவோ கூறினுய் அல்லவா? சரிதான். ஆனல் அது விஷயத்தில் ஒரு அற்பமான ஆக்ஷேபனை மட்டுமே யிருக்கிறதாகத் தெரிகிறது " என்ருன்.

கற்பகம்:—"அவ்வளவுதானே. அதை யொரு நொடியில் விலக்கிவிடலாம் அதென்ன அந்த அற்ப ஆக்ஷேபனை ?" என்ருள்.

அம்மனிதன்:—"ஒன்றுமில்லை. உன்னை மணம் புரிய எனக்குக் கடுகளவு விருப்பமேனும் இல்லை யென்பதே" என்ருன்.

கற்பகம்:--அப்படியானல் தாங்கள் மரணமடைய ஆயத்தமா யிருக்கிறீர்களோ?

அம்மனிதன்:—அப்படிப்பட்ட வேலை நான் செய்யவேண்டிய அவசியமேயில்லை. ஏனெனில் மரணம் எனக்குப் புதிதல்ல. மிக்க பயங்கரமான மரணத்தைப் பன்முறை சமீபத்தில் நெருங்கி நேராகக் கண்டிருக்கிறேன். நான் எப்போதும் அதற்குச் சர்வாயத்தமாகவே யிருக்கிறேன். உனக்குக் கடவுள் இருக்கிருர் என்ற நம்பிக்கையிருந்தால்—என் வரையில்உனக்கிருக்கிறதென்பது மிக்க சந்தேகமே—நீயும் ஆயத்தமாகவே யிருப்பாய். ஏனெனில் நம்மிருவரில் யாருக்கு முன்னே மரணம் வருமோ தெரியாது" என்ருன்.

கற்பகம்:—உம்முடைய முரட்டுத் தைரியம் கூடிய சீக்கிரத்தில் சோதனை செய்யப்படும். இதுகாறும் நான் அதிக பொறுமையே காட்டி விட்டேன்.

அவன்:—ஆமாம். தெரிகிறது தெரிகிறது. இரண்டுமாத காலமாக அதிக பொறுமை காட்டினுய். அன்று

முதலில் என்னை யிந்த அறைக்குக் கொண்டுவரும் போது நான் நித்திரை செய்யும் சமயத்தில் என்கை கால்கள் கட்டப்படாமலிருந்தால் அன்றே சில உயிர்கள் விண்ணுலகம் போயிருக்கும்.

கற்பகம்:—இது வீண்பெருமை.

அம்மனிதன்:—அந்தப் பெயரே எனக்குத் தெரியாது. என்னை யிங்கு கொண்டுவந்து அடைத்துவிட்ட பின்னர் அன்றிரவே நீ மிக்க அன்போடு என்னை மணம்புரிய விருப்பதாய்க் கூறினை. அது முதல் இங்கு வந்தபோதெல்லாம் ஐந்தாறு முறையதையே கூறினுய். ஆ இது மிக்க பொறுமையே.

கற்பகம்:—நீர் கேலியாகவும் அசட்டையாகவும் பேசினுற் பேசும். அப்பொறுமை இனியும் இராது. எதற் கும் ஒரு வரம்புண்டல்லவா.

அம்மனிதன்:—இருக்கலாம். இங்கே நீயும் உன் சகோ தரிகளும் எல்லாவற்றையும் உங்கள் போக்கின்படி நடத்துவதாகத் தெரிகிறது. அப்போக்கு வெகு விநோதமானதாக விருக்கிறது.

கற்பகம்:—இந்த வீண் பேச்சால் ஒரு பயனுமில்லை. உங் களுக்கு இப்போது வயிறூர ஆகாரமளிக்கப்படு கிறது. கடினநிலை யேற்பட்டால் உமது மனதின் கடினத்தன்மை யொழிந்து போம். நாளைக்கு அரை யாகாரமே கொடுக்கப்படும்.

அம்மனிதன்:—எத்தனையோ முறைகளில் ஆகாரமே யில் லாமலிருந்தவனுக்கு அரைச்சாப்பாடு தேவபோஜ னமேயாகும்.

கற்பகம்:—கேளும். மறுநாள் இன்னும் குறைக்கப்படும், அடுத்தநாள் அதனினும் குறைக்கப்படும். கடைசி யில் பசிப்பிணியாகிய பகைவன் உம்மை வாட்டி

வருத்தும் போது அகங்காரம் குன்றி ஆவிசோர்ந்து முழங்காலிட்டுப்பணிந்து மன்னுப்பு கேட்டுக்கொள்வீர்.

அம்மனிதன்:—நீ நான் பெருமை கூறிக்கொள்கிறேனென்று சற்று முன்னே பியம்பினுய் ஆகையால் நான் ஒன்றும் பதில் கூறமாட்டேன்.

கற்பகம்:—நீர் என்ன பதில் கூறுவீ ரென்பதை நான் அறிவேன். நான் உமக்குச் செய்யப்போகும் நன்மைகள் எப்படிப்பட்டவை? திரண்டசெல்வத்தையும் வரம்பில்லா அதிகாரத்தையும் அடைய விரும்பும் எவனும் அருமையானவையாகக் கருதத்தக்கவைகளல்லவோ. முதலாவது இத்தீவில் பூரண ஆக்ஷிபுரியும் மூன்றரசர்களில் ஒருவர் பதவி.

அம்மனிதன்:—ஆம். நல்ல பதவி. அகப்பட்டவர்களை வருத்திச் சிறைவைத்துக் காவல் காக்கும் பதவி.

கற்பகம்:—சூரர்களான வீரர்கள் நிறைந்த சேனைக்குச் சேனுதிபதியா யிருக்கும் பதவி.

அம்மனிதன்:—ஆகா. நல்ல வீரர். ஒரு கூட்டம் கொலைபாதகத்திற்கஞ்சாத கள்ளப்பயல்கள்.

கற்பகம்:—இத்தீவின் வருமானமாகிய திரண்டசெல்வம்.

அம்மனிதன்:—உன் அண்ணனிடம் மிக்க அக்கிரமமாகக் கொள்ளையடித்து அபகரித்த செல்வம்.

கற்பகம்:—போதும் பேசாமலிரும். இன்னெருசுத்த வீரனுல் இத்தகைய சேனைக்குத் தலைவனுகவிருந்து யுத்தம் புரிய எவ்வளவோ சந்தோஷமுடையவனுக விருப்பான். அந்தோ....

அம்மனிதன்:—இன்னெருவருக்கு உரித்தானதை யபகரித்துக்கொள்ளும் அக்கிரமச்செயலுக்கு உதவிபுரியும் வழக்கம் எனக்கில்லை.

கற்பகம்:—வல்லமையால் பெறுவது சுதந்திரமாகுமல்லவோ.

அம்மனிதன்:—எப்போது? அந்த வல்லமை நீதியின் வழியாக உபயோகிக்கப்பட்டால்.

கற்பகம்:-உமக்கு இது விளங்கும்படிச் செய்வது கடினம். இன்னும் ஒரு விஷயமே கூறுகிறேன். அது மட்டும் உம்முடைய மனதை விட்டு நீங்காதிருக்கவேண்டும். இதுவே நான் இத்தகைய விஷயங்களை யுமது முன்னிலையில் கூறுவது. இப்போது என்னிடம் உமக்கு வெறுப்பை யுண்டாக்க என்ன விருக்கிறது? என் வனப்பு உமக்கு மனதிற் படவில்லை. அல்லது உலகப்பிரசித்திபெற்ற சுத்தவீரராகிய உமக்குக் காதலின் உணர்ச்சியில்லையா?

அம்மனிதன்:—அப்படியல்ல. நான் இருமுறை காதல் கொண் டிருக்கிறேன். அது பல வருடங்களுக்கு முன்.

கற்பகம்:—அப்போது தாங்கள் வாலிபனாக விருந்தீர்கள். இரண்டுமுறை காதல் கொண்டவர் மூன்று முறை காதல் கொள்வது சுபாவமாகும். ஆம். கடைசியில் என் வனப்பை யுணர்ந்தபின் என் மேல் காதல் கொள்வீர்" என்றாள்.

அம்மனிதன்:—ஆ வனப்பா! ஒரு ஸ்திரீக்கு அவள் கண், மூக்கு, வாய், பற்கள், இவையல்ல அழகை யளிப்பது. உனக்கிருக்கும் அதே அவயவங்கள் ஒருவருக்கு அழகாகத்தோன்றும் மற்றொருவருக்கு அழகாகத் தோன்றா. அவை யுண்மையாக அழகுடையவை யாயின் யாவர்க்குமே அழகாகத் தோன்றவேண்டும். அப்படியில்லை. ஒரு ஸ்திரீக்கு அழகாவது அச்சம்,

மடம், நாணம், கற்பு இவைகளே யாகும். இவைகளை யாவரும் அழகாகக் கொள்வர். இந்த அழகே என்றும் அழியாத அழகு. உன்போல் அவையில்லாதவளுக்கு அழகில்லை. இத்தகைவள் மேல் ஆசைக் கொள்வதைவிட நான் விஷமில்லாத ஒரு பாம்பின் அழகில் ஆசை கொள்வேன். ஓ கற்பகச்சீமாட்டியே —நல்ல பட்டம்—உன் யோக்கியதைகளைத்தும் நான் அறிந்திருக்கிறவரையில், உன்மேல் நான் காதல் கொள்வேனென்று இன்னும் நீ கருதுகிருயா? உன்னை நான் மனைவியாக ஏற்றுக்கொள்வேனென்று கனவு காண்கிருயா? சேசே! நீ என் பெயரை மட்டும் கேள்விப்பட்டாயே யன்றி, என் சுபாவகுணத்தைப்பற்றிச் சற்றும் கேள்விப்படவில்லை. கீழே அழுகி வெடித்துப் புழுத்துக்கொண் டிருக்கும் சவத்தின் குழியின்மே லுள்ள செடியில் மலர்ந்திருக்கும் புஷ்பம் அழகாகவே தோன்றுகிறது. ஆனுல் அதை அறிவுடையோர் தொடவும் வெறுப்படைவர். உன் அயோக்கிய குணங்களை நோக்க உன் அழகு அம் மலரின் அழகு போன்றதே" என்றான்.

கற்பகம்:—"இப்போது நான் உம்மோடு ஒன்றும் பேச மாட்டேன். உம்முடைய முடிவான பதிலை யிப்போது நீர் கூறவேண்டாம். நான் மறுமுறை யும்மை வந்து காணும்போது உமது மனதின் கடினத் தன்மை யுடைந்து, வீரங்குன்றி, பலனழிந்து, ஆங்கார மொழிந்து ஆவிசோரும் நிலைமையி லிருப்பீர். அப்போது மன்னுப்புக்குக் கெஞ்சுவீரென்று நான் நன்கறிவேன்" என்றாள்.

அம்மனிதன் இவைகளைக்கேட்டு வெறுப்போடு புன்னகை புரிந்தானே யன்றி ஒரு பதிலும் கூறவில்லை. கற்பகம் மறுபடி யொன்றும் கூறாமல் கோபத்தால் பற்களைக் கடித்துக்கொண்டே சென்றாள்.

---

## 50-வது அத்தியாயம்

தெய்வகடாட்சத்தால் இரகசிய உதவி—சகோதரிகளின் சதியாலோசனை-காப்டேன் உருத்திரப்பன் சங்கரனுக்கிடும் கட்டளைகள்—குறிப்புவார்த்தை.

---

அந்த இரவுகழிந்தது. மறுநாள் காலை ஒன்பது மணிக்குப் பாதாளக்கிடங்கிற்குள் நாற்காலி மறுபடி யிறங்கியது. ஆனால் இப்போது அதில் யாரும் கட்டப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதில் ஆகாரவகைகளும், ஒயின் புட்டிகளும், ஜலம் நிறைந்த ஜாடிகளும் அதன்மேல் வைக்கப்பட் டிருந்தன. இம்முறை காப்டன் உருத்திரப்பனுக்குப் பதில் அவன் ஆட்களில் ஒருவன் சிறையாளர்களுக்கு ஆகாரம் கொண்டுபோகும் பெரிய பொறுப்பை யேற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. அவன் நமது நேயர்களுக்குத் தெரிந்தவனே. இவன் நமது பிரேமநாதன் தங்கியிருக்கும் சங்கரன் என்றகிழவன் புத்திரனாகிய கேசவனே யாகும். அச்சமயம் காப்டன் வேறு வேலையாக வெளியில் போயிருந்தபடியால் கேசவன் அவ்வேலையைச்செய்ய நேர்ந்தது.

நாற்காலி பாதாளத்தில் போய் இறங்கியதும், கேசவன் நாற்காலியின்மே லிருந்து ஒரு தட்டு உணவுப் பொருள்களையும் ஒரு இரொட்டி, ஒருபுட்டி ஒயின், ஒரு ஜாடி ஜலம் இவற்றை யெடுத்துக்கொண்டுபோய் முதலில்

உலகநாயகனிடம் அளித்தான். பிறகு திரும்பிவந்து அவ்வாறே வேறொரு தட்டு உணவுப்பொருள் இரொட்டி, ஒயின், ஜலம் முதலியவற்றைக் கொண்டுபோய் மேஜர் இலக்ஷ்மணனிடமளித்தான். பிறகு மூன்றாவதாக அதே வித ஆகாரம் முதலியவற்றை யெடுத்துக்கொண்டு இராமநாதன் அறைக்குச் சென்றான்.

இராமநாதன் அவனைக்கண்டதே மிக்க கோபமடைந்து "அட சண்டாளத்துரோகி! நீதானே என்னைக் காட்டிக்கொடுத்துவிட்டாய்?" என்றான்.

கேசவன்:—"தாங்கள் அவசரப்பட்டு கூறி விடவேண்டாம். தங்களைக் காட்டிக்கொடுத்தது நானல்ல" என்றான்.

இராமநாதன் :—மிக்க வியப்படைந்து, "என்ன? நீயல்லவா? அப்படியாயின் பிரேமநாதனா?" என்றான்.

கேசவன்:-அல்ல அல்ல. தங்களைக் காட்டிக்கொடுத்தவன் ஹோட்டல்காரன்" என்றான்.

இராம:—ஆ அந்தக்கள்ளப்பயல் என்னிடம் பணம் கூட வாங்கிக் கொண்டானே.

கேசவன்:—அவன் வேணுமென்று கூறியிரான். கொஞ்சம் அதிகமாகக் குடித்துவிட்டால் அவன் மனதில் ஒன்றும் நிற்காது. நேற்று காப்டன் உருத்திரப்பன் அவனிடம் சென்றிருந்தான். இருவரும் குடித்துக் கொண்டிருந்தபோது ஹோட்டல்காரன் இரகசியத்தை அஜாக்கிரதையால் வெளியிட்டுவிட் டிருப்பான்.

இராம:—பிரேமநாதன் ?

கேசவன்:—"பிரேமநாதனுக்கும் ஒரு ஆபத்து மில்லை. நீயும் அவனும் இரகசியமாகச் சந்தித்த விஷயம் ஹோட்டல்காரனுக்குத் தெரியாது. இரவு நான் நீ

பிடிக்கப்பட்ட சங்கதியைப் பிரேமநாதனிடம் கூறி னேன்.

இராம:—அப்படியானல் நீ உன் வாக்குத்தத்தப்படி எங் களுக்கு உதவிசெய்வா யல்லவா?

கேசவன்:—அதை யுறுதியாகக்கூறவே இப்போ திங்கு வந்தேன். காப்டென் வெளியில் சென்றிருக்கிறான். அவனுக்குப் பதில் உங்களுக்கு ஆகாரங் கொண்டு வரும் வேலையை எனக்களிக்கும்படி நான் செய்து கொண்டேன். நான் துரோகம் செய்வேனென்று கருதாதே. நீர் எனக் களிப்பதாகக் கூறிய பரிசுத் தொகைக்கும் முன்னமே யளித்திருக்கும் தொகை க்குமாவது நான் என் வாக்குத்தத்தப்படி நடக்க வேண்டி கடமைப்பட் டிருக்கிறேன். நான் இன்னும் இங்கு ஆலசியம் செய்யலாகாது. இங்கு சுவருக்குக் கூடச் செவியிருக்கும்.

இராம:-"ஆ! நீ இப்போது கூறியவற்ருல் எனக்கு அளவு கடந்த சந்தோஷ முண்டாயிற்று. என் சகோதர னுக்கு ஒரு வார்த்தை கூறி விடுகிறுயா?

கேசவன், ஆகா அப்படியே கூறுவேன் என்றியம்பி விட்டு அங்கிருந்து இலட்சுமணனிடம் சென்று பிறகு கற்ப கத்தின் ஆளிடம் சென்று இரவு அவள் பயமுறுத்திச் சென்றபடி அவனுக்கு அரை யாகாரமே யளித் தான். அவனிடம் சற்று நேரம் சம்பாஷித்தான். இவர் கள் சம்பாஷணை விஷயம் பின்னல் வெளிவருமானதால் ஈண்டு கூருது விடுக்கிறேம். கேசவன் மறுபடி மற்ற மூவ ரிடமும் சென்று கிடங்கினின்றும் வெளியேறினன்.

இச்சம்பவங்கள் நடந்து நான் கைந்து தினங்களான பின் ஒருநாள் மாலே பொழுதமரும் சமயம் மூன்று சகோ

தரிகளும் தங்கள் தந்தையிருக்கும் அறையில் உட்கார்ந்து குசுகுசுவென்றும், கண்சமிக்கைகளாலும், சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார்கள். இடையிடையில் நித்திரைசெய்யும் தங்கள் தந்தையைக் குறிப்பாக நோக்கிக்கொண்டு மிருக்கிறார்கள். அவர்கள் தந்தையாகிய மேகநாதம் பிரபுவிடம் அவர்கள் குடும்ப (டாக்டர்) வைத்தியர் உட்கார்ந்துகொண்டு பிரபுவின் முகத்தை யுற்றுநோக்கிக்கொண்டும் அடிக்கடி நாடிகளைப் பார்த்துக்கொண்டு மிருக்கிறார். விசேஷம் என்னவெனில் பிரபுவுக்கு மரண காலம் சமீபிப்பது போல் தோன்றியது.

சகோதரிகள் சம்பாஷித்துக் கொண்டே யிருந்து எழுந்து போய் பிரபுவினருகில் நின்று அவர் முகத்தை யுற்று நோக்கிவிட்டு வைத்தியரைச் சாடையாகப் பார்த்தார்கள். வைத்தியர் "பிரபு நன்றாய் நித்திரை செய்கிறார். ஆனால் சுகமான நித்திரையல்ல" என்றார்.

கற்பகம்:—ஏன் டாக்டர். பிரபுவுக்கு மரணம் சமீபித்திருக்கிறதோ?

டாக்டர்:—ஆம் ஆம். அவர் ஆயுள் இப்போது மணிக்கணக்கில இருக்கிறது.

கற்பகம்:—எத்தனை மணிநேரம் இருப்பாரென்று திட்டமாகக் கூறமுடியாதோ?

வைத்தியர்:—இவர் இன்னும் பனிரண்டு மணி நேரத்திற்குமேல் இரார்.

இதைக்கேட்டதே சகோதரிகள் மூவரும் ஆ பனிரண்டேமணி! என்றதும் ஒருவரை யொருவர் குறிப்பாகப் பார்த்துக்கொண்டார்கள். அச்சமயம் பிரபுவுக்குச் செவிலித்தாய் வேலை செய்யும் மாரியாயி அறைக்குள் வந்தாள். சகோதரிகள் உடனே அங்கிருந்து சென்று

தங்கள் அறையில் உட்கார்ந்து ஆலோசனை செய்யத் தொடங்கினார்கள்.

கற்பகம்:—டாக்டர் நமது தமையனுக்கு உடனே ஆளனுப்ப வேண்டுமென்று கூறினர்.

சண்பகம்:—அது நமக்கு நேர்விரோதமான செயலென்றும், அப்படி நாம் ஒரு போதும் செய்யமாட்டோமென்றும் அவருக்குத் தெரியாது.

துளசி:—நமது தமயன் இச்சமயம் தற்செயலாக வந்துவிட்டால் அதைவிடக் கெடுதி வேறில்லை. அவன் வரலாகாதென்று நாம் கடவுளைப் பிரார்த்திக்கவேண்டும்.

கற்பகம்—இன்னும் பனிரண்டு மணி நேரமேயிருக்கிறது. இதற்குள் எல்லா வேலையும் நிறைவேறவேண்டும். இப்போது நாம் குருட்டு நம்பகம் கொள்ளலாகாது. நமது காரியங்கள் என்ன நிலைமையிலிருக்கின்றனவென்று திட்டமாய்ச் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

சண்பகம், கற்பகத்தை நோக்கி "என் அக்கா! உன் ஆளைப்பற்றி உனக்கு நம்பிக்கை யிருக்கிறதல்லவா? என் வரையில் என் பங்குக்கு வந்தவன் பூரணமாகச் சம்மதித்துவிட்டான். அன்று முதல் நான் அவனைக் காணும் போதெல்லாம் அவன் அந்த வாக்குத்தத்தத்தையே யுறுதிப்படுத்திக்கொண் டிருக்கிறன்.

கற்பகம்:—என் ஆள் வழிக்கு வந்துவிடுவான். குறைந்த ஆகாரம் அளிக்கப்பட்டது முதல் அவன் கடினசித்தமும் பிடிவாத குணமும் வரவரக் குறைந்து கொண்டே வருகின்றன.

சண்பகம்:—இன்று அவனுக்கு ஆகாரமாவது சலமாவது கொடுக்கப்படவே யில்லை.

கற்பகம்:—ஆம் இராத்திரிக்கு நான் அவனைக்காணப் போகும் போது அவன் போசனமருந்திப் பல மணி கள் நேரம் ஆய்விட் டிருக்கும்.

சண்பகம்:—அவன் இணங்கிவிடுவானென்று நம்புகிறாயா?

கற்பகம்:—பசிநோய் வாட்டும்போது அவனுடைய பிடி வாதத் தீர்மானங்களனைத்தும் பறந்துபோம். இரவு நான் அவனைக்கண்டபோது இதுகாறும் என்று மில் லாத அவ்வளவு சாந்தமுடையவனாக விருந்தான். அலட்சியமான பேச்சுகள், கேலிப்பேச்சுகள், வைவது, தூஷிப்பது ஒன்றுமேயில்லை. முகவாட் டத்தோடு துயரமான சிந்தனையிலிருந்தான். சந்தேக மின்றிச் சம்மதித்து விடுவான்.

துளசிபாய்:—"என் ஆளைப்பற்றி நான் தாராளமாகக்கூறு வேன். இரவு முதல் எனக்குப்பூரண நம்பிக்கை யுண் டாய் விட்டது. ஆம் உலகநாயகன் என் கணவனாய் விட்ட மாதிரியே யென்று தைரியமாகக் கூறு வேன்," என்றியம்பிவிட்டுக் கற்பகத்தை நோக்கி, "நீ மட்டும் உன் ஆளுக்குச் சில நாட்களுக்கு முன்பே இப்போது செய்தபடி ஆகாரத்தைக் குறைத்திருந் தால் மிக நலமாக விருந்திருக்கும்" என்றாள்.

கற்பகம்:—இப்படிச் சமயம் நெருங்கிவிடும் என்று யாருக் குத் தெரியும். இன்னும் அவகாசமிருக்கிறதென்று நான் எண்ணி யிருந்தேன். மேலும் உன் ஆளாகிய உலகநாயகன் நம்மிடம் சிக்கி பத்து பதினைந்து நாட் கள் தானே ஆகின. மூன்று பேருக்கும் மூன்று புரு டர்கள் கிடைத்த பிறகு தானே நாம் முடிவாக இப் படிச் செய்யலாம் என்று தீர்மானிக்கக்கூடும். ஆயி னும் என் ஆளைப்பற்றி எனக்கு நம்பிக்கை யிருக் கிறது.

சண்பகம்:—சரி. அப்படியாயின் மற்ற இருவரும் கூடத் தங்கள் சம்மதத்தை யளித்துவிட்டதாகவே கருதிக் கொண்டு மேல் நடக்கவேண்டியவற்றைப்பற்றி ஆலோசிப்போம். கலியாணம் இந்த இரவே நடை பெற வேண்டும். நமது தந்தையின் மரணசாசனம் ஜனப் பிரதிநிதிகளின் சபைத்தலைவரிட மிருக்கிறது.

கற்பகம்:—அச்சபை யவயவிக ளெல்லாம் நமது சார்பி லிருப்போர்களே. பொழுது விடிந்து சூரியன் உதயமாவதற்குள் நமது தந்தை யிறந்து போவார். பிரதிநிதிகள் சபை யுடனே கூடும். உடனே இத்தீவின் அரசாக்ஷி நம் மூவரிடமும் நமது கணவர்களிடமும் அளிக்கப்பட்டதென்று விளம்பரப் படுத்தப்படும். உடனே காப்டெனும் இப்போது சேகரம்செய்திருக் கும் ஆட்களும் முன்னமே நம்மிடமுள்ள ஆட்களும் கூடி உருவிய வாளோடு வீதிகளில் சுற்றி வருவார் கள். ஜனங்கள் பிரபு இறந்த சங்கதியையும் அரசாக்ஷி நம்மிடம் சேர்ந்து விட்டதையும் கேட்டு திப்பிரமை யடைந்து விடுவார்கள். அவர்கள் அப்பிரமையி னின்று தெளியுமுன்பே சேனைகளைக் காண்பார்கள். கண்டதே பீதியடைந்து திகைப்பார்கள். அதே சம யம் பணச்செலவைக் கவனியாமல் நகரத்திலுள்ள, கள்ளர், துஷ்டர் போக்கிரிகள் முதல் அனைவரும் இஷ்டப்படி குடித்து உண்டு கேளிக்கையா யிருக்கும் படி எல்லா ஹோட்டல்களிலும் பணம் கொடுத்து ஏற்பாடு செய்து விட்டால், ஜனங்களெல்லாம் நமது ஆளுகையையே விரும்புவார்கள்.

சண்பகம்:—அதன் பிறகு நமது தமையன் வரட்டும்.

கற்பகம்:—அப்புறம் அவனுக்கு நல்ல வரவேற்பு கிடைக்

கும். அவன் அந்த நாட்டிலுள்ள ஆட்களைக் கூட்டி வந்தாலும் ஒன்றும் முடியாது.

துளசி:—நம்மிடம் இருக்கிற ஆட்களோடு துணையும் வருமல்லவா ?

கற்பகம்:—காப்டென் மிகத்சந்திரமாகவும் இரகசியமாகவும் துணைக்கு வேறு ஆட்களை நகர ஆட்களிலிருந்து ஆயத்தம் செய்திருப்பது மிக்க நல்ல யோசனை. அவர்கள் இன்றிரவு கோட்டைக்குள் வந்து சேர்ந்து விடுவார்கள்.

சண்பகம்:—இவர்களன்னியில் நமது கணவர்கள் சதாரணமான ஆட்களல்ல.

கற்பகம்:—என் கணவன் உலகப்பிரசித்தி பெற்றவன். இப்போது உலகில் அவனுக்கு மிஞ்சிய வீரனில்லை.

இவர்களிவ்வாறே தங்கள் நிலைமையைப்பற்றி நம்பிக்கையோடும் தைரியத்தோடும் பேசிக்கொண்டிருந்து பிறகு தங்கள் தந்தை யிருக்கும் அறைக்குச்சென்றார்கள். பிரபு இன்னும் நித்திரையிலிருக்கிறார். வைத்தியர் இவர்களைக் கண்டதும் "உங்கள் தமையனுக்கு ஆள் அனுப்பி விட்டீர்களா ?" என்றார். கற்பகம் சற்றும் வாய்கூசாமல் "ஆகா, அப்போதே யனுப்பி விட்டேன்" என்றாள். இப்போது இவர்களை யந்த அறையிலிருக்கவிட்டு, மாளிகையின் மற்றபாகத்தில் நடக்கும் சங்கதியைக் கவனிப்போம்.

பாதாளகிடங்கில் அதன் காவலர் இருக்கும் அறையில் காப்டென் உருத்திரப்பன் தனியாய் உட்கார்ந்து கொண்டு தன் எதிரில் மேஜைமே லிருக்கும் ஒயினைக் குடித்துக்கொண்டும் பழவகைகள் பலகாரங்களை யருந்திக்கொண்டும் சந்தோஷமான நிலைமையிலிருக்கிறான்.

அச்சமயம் கேசவன் அந்த அறைக்கு வந்ததைக் கண்டதே காப்டென் "ஆ! இச் சமயம் உன்னையே காண விரும்பினேன்" என்றான்.

இம்மொழிகளைக்கேட்ட கேசவன் தன் சூதான நடக்கைகள் எங்கே அவனுக்குத் தெரிந்துவிட்டனவோவென்று மிக்க கலக்கமடைந்தான். காப்டென் அதை வேறு விதமாக அர்த்தம் செய்துகொண்டு "ஆ! நீயே அதற்காக மனஸ்தாப மடைவதால் உன்னை மன்னிக்க வேண்டியதே. மனிதன் அப்போதைக்கப்போது தன் தாய்தந்தையரைக்காண விரும்புவது சுபாவமே. ஆனால் நமது கோட்டையின் சட்டம் கண்டிப்பானதல்லவா. அதைப்பற்றி நான் உனக்கு எச்சரிக்கை செய்திருந்தும் நீ நேற்றுகூட நகரத்திற்குள் சென்றிருக்கிறாய்" என்றதே,

கேசவன், அப்பா தப்பினோமென்று, "காப்டென்! என் தந்தை மிக்க கிழவர், தாயும் வயது முதிர்ந்தவள்..." என்றதே காப்டென் "சரி சரி தெரியும் அது சுபாவமே. நான் இப்போது அதற்காக உன்னைத் தண்டிக்கக் கருதவில்லை. இப்போது இங்கு நடக்கும் விவகாரங்கள் இருக்கும் நிலைமையில் எந்த நிமிடத்திலோ என்னிடமுள்ள ஆட்களெல்லாம் தயாராய் வேலைக்கு உதவவேண்டி நேரிடும். ஆகையால் அக்காரியம் நிறைவேறு மட்டும் நீ என் கட்டளையின்றி வெளியில் செல்லலாகாது என்று கூறுவதற்கே இவ்வளவும் கேட்டேன்" என்றான்.

கேசவன்:—"எஜமானே. நான் தங்கள் கட்டளையில் ஒரு எழுத்துக்கூட தவறிநடவேன்." என்றான்.

காப்டென்:—"ஆ! அது தெரியும். அதனால்தான் கொஞ்ச காலமாக உன்னிடம் அதிக நம்பிக்கை வைத்து நடந்து கொள்கிறேனென்பது உனக்குத் தெரிகிற

186482

தல்லவா? நான் வெளியில் செல்ல நேரிடும்போது, சிறையாயிருப்பவர்களுக்கு ஆகாரம் கொடுக்கும் பொறுப்பான வேலையை யுன்வசத்தில் விட்டிருக்கிறேன் அல்லவா?'' என்றான்.

கேசவன்:—நான் தங்கள் கட்டளையை மிகக் கண்டிப்பாகவே நிறைவேற்றி வருகிறேன். எள்ளளவும் அதில் தவிரமாட்டேன்.

காப்டேன்:—அவ்விஷயத்தில் எனக்குப பூரண நம்பிக்கையுண்டு. இன்று அந்த ஆள்...கற்பகச் சீமாட்டியின் ஆளுக்கு...

கேசவன்:—தெரிந்து கொண்டேன். அவனுக்கு ஆகாரமாவது ஜலமாவது ஒன்றுமே கொடுக்கவில்லை.

காப்டேன்:—பேஷ் அதுதான் சரி. சீமாட்டியின் கட்டளை யதுவே. அவனுடைய கடினமனமும் பிடிவாதமும் இப்போ தெப்படி யிருக்கிறது?

கேசவன்:—அய்யா! எப்படிப்பட்டவனுயினும் அவன் அகங்காரத்தை யடக்குவதற்குக் குறைந்த ஆகாரமே சரியான மருந்து என்று எனக்கு இப்போதுதான் தெரிந்தது. ஆகாரம் குறையவே அவன் பாடு சோர்வடைந்து விட்டது.

காப்டேன்:—சரி, கேசவா! நான் ஒன்று கேட்கிறேன். நீ மற்ற எல்லா ஆட்களிடமும் தாராளமாகப் பேசுகிருய். அவர்களெல்லாம் பூரணமாக நம்பக்கூடியவர்கள் தானு? சமயத்தில் உறுதியாகத் தைரியத்தோடு நிற்பார்களா? எத்தகைய விஷயத்திலும் துணிகரமாகத் தலையிடுவார்களா? அவர்களைப்பற்றி உன் அபிப்பிராயமென்ன?

கேசவன்:—அதிற் சந்தேகமேயில்லை. நாங்களனைவரும்

தங்களைக் குருவைப்போல் பாவிக்கிறோம். அச் சீமாட்டிகள் விஷயத்திலோ, அவர்களுக்காக எங் கள் உயிர்களையே கொடுப்போம்.

காப்டேன்.—பேஷ். நான் அப்படித்தான் கருதினேன். நமது உதவி யச்சீமாட்டிகளுக்கு வேண்டிய சமயம் நெருங்கி விட்டது. பிரபு மரணத்தருவாயில் இருக் கிறார்.

கேசவன்:—தெரியும். அதற்காக நாங்கள் மிக்க விசனப் படுவதோடு எங்கே அரசாக்ஷி இவர்களிடமிருந்து நீங்கி விடுமோ வென்று மிக்க விசனப்படுகிறோம்.

காப்டேன்:—நீங்காது. அப்படி நீங்காமலிருக்க நீங்கள் உதவி செய்வீர்களல்லவா.

கேசவன்:—நாங்கள் எவ்வாறு உதவி செய்ய வேண்டு மென்பதை மட்டும் கூறிவிடும். எங்கள் உயிரைத் தத்தம் செய்வோம்.

காப்டேன்:—இப்போது இதற்கு மேல் கூறமாட்டேன். சமயம் நெருங்கி விட்டதென்று மட்டும் ஆட்களிடம் ஜாடையாய்க் கூறிவிடு.

கேசவன்:—அப்படியே செய்கிறேன். இன்னும் ஏதே னும் கட்டளை யுண்டோ?

காப்டேன்:—இருக்கிறது. நான் சிலநாட்களாக அடிக் கடி வெளியில் சென்றுகொண் டிருக்கிறேனே தெரி யுமல்லவா. நான் வீணுக்குப் போய் திரிந்துகொண் டிருக்கவில்லை. மிக்க ஜாக்கிரதையாகவும் இரகசிய மாகவும், உங்களுக்குத் துணையாகச் சில ஆட்களைச் சேர்த்திருக்கிறேன். அவர்கள் இன்றிரவு கோட் டைக்குள் வந்து உங்களோடு சேர்ந்துகொள்ள ஆயத்தமாக இருக்கிறார்கள். இன்றிரவு உன்னு

டைய உதவிவேண்டியதாக விருக்கிறது. உனக்கு ஒருமிக்க நம்பகமும் பொறுப்புமான வேலை வைக்கப் போகிறேன். அந்த வேலை இரவு பதினொரு மணிக்கு நடக்க வேண்டும். கொஞ்சம் தவறினல் காரியம் கெட்டுவிடும். ஆகையால் நீ இது முதல் அக் காரியம் முடியுமட்டும் இன்னும் ஒரு துளிச்சாராயம் கூட அருந்த லாகாது.

கேசவன்:—நான் மறுபடி தங்கள் அனுமதி பெற்றே குடிப்பேன். அற்பனுகிய என்மேல் தாங்கள் இத் தகைய நம்பிக்கை வைத்து பொறுப்பான வேலை யளிப்பது எனக்கு எவ்வளவோ கௌரவம். நான் அதைக் காப்பாற்றிக்கொள்ள மிக்க ஜாக்கிரதை யெடுத்துக் கொள்வேன்.

காப்டேன்:—ஆ! உன் குணம் எனக்கு நன்ருய்த் தெரியும். இன்றிரவு பதினொரு மணிக்கு முன்பே அந்த ஆட்களெல்லாம் அகழியின் கரையிலுள்ள மேட்டில் வந்து கூடுவார்கள். அவர்களுக்குத் தலைவனுக ஒருவனை யேற்படுத்தியிருக்கிறேன். சரியாகப் பதினொரு மணிக்கு அவர்களெல்லாம் கோட்டைக்குள் பிரவேசிப்பார்கள். அத்தலைவனிடம் கோட்டைக்குள் பிரவேசிக்க அனுமதிபெறும் குறிப்பு வார்த்தையைக் கூறியிருக்கிறேன். ஆகையால் நீ பதினொரு மணிக்குச் சற்று முன்பே சென்று கோட்டை வாயிலில் இருக்கும் காவலனிடம் அக்குறிப்பு வார்த்தையைக் கூறினல் அவன் அவர்கள் வந்ததே ஆலசியமின்றி அவர்களையுள்ளே விட்டு விடுவான்.

கேசவன்:—தாங்கள் என்னைப் பூரணமாக நம்பலாம். அந்த ஆட்கள் உள்ளே வந்து சேர்ந்த பிறகே இனி ஒருத்துளி சாராயமேனும் அருந்துவேன்.

காப்டென்:—இதுவே நன்றியுள்ள வார்த்தை. அக்குறிப்பு வார்த்தை "மூன்று சீமாட்டிகள்" என்பதே. நான் கூறியபடி இச்சங்கதி மிக்க ஜாக்கிரதையாகவும் இரகசியமாகவுமே நடக்கவேண்டும்.

கேசவன்:-எஜமானே. இரவிற்கு நாற்காலியோடு நானும் கிடங்கிற்குள் வரவேண்டிய வேலையிருக்கிறதோ?

காப்டென்:—இன்று சீமாட்டிகள் கீழிறங்கி வரும்போது நீ வரவேண்டியதில்லை. அதேசமயத்தில் நீ நான் கூறிய வேலையி லிருக்கவேண்டும். ஆயினும் நீயொரு வேலை மட்டும் செய்யவேண்டும். அதாவது இன்றிரவு சீமாட்டிகள் அந்தச் சிறையாளர்களைக்கண்டு பேசும் போது அவர்கள் உற்சாகமுடையவர்களாக இருக்க வேண்டும். ஆகையால் நீ சரியாக ஒன்பது மணிக்கு என் அறையில் சென்று பார்த்தால் மூன்று புட்டிகளில் ஒயின் வைத்திருக்கும். அவற்றைக் கொண்டு போய் உலகநாயகனுக்கு ஒன்றும், மேஜர் இலக்ஷ்மணனுக்கு ஒன்றும் கொடுக்கவேண்டும். இராமநாதன் நமது விவகாரத்தில் எவ்விதச் சம்பந்தமுமுடையவனல்ல. ஆயினும் பாபம் அவனும் உற்சாகமாகவிருக்கவேண்டும். ஆகையால் அவனுக்கு மூன்றுவது புட்டியைக் கொடுத்துவிடு.

கேசவன்:—தங்கள் கட்டளைப்படிக்கே செய்கிறேன். தாங்கள் கூறியதால் அந்த நான்காவது ஆளுக்கு ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை யென்று அர்த்தமல்லவா?

காப்டென்:—"ஆம் ஆம். ஒரு துண்டு ரொட்டியாவது ஒரு துளி நீராவது அவனுக்கு அளிக்கலாகாது. இப்போது இதற்குமேல் நான் கூறத்தக்கது ஒன்றுமில்லை. இனி நீ போகலாம்" என்றான்.

கேசவன் உடனே அங்கிருந்து வெளிப்பட்டான் காப்டெனுடைய அறையை விட்டு வெளிவந்ததே கேசவன் முகத்திலிருந்த மரியாதை யடக்கம் பக்தி முதலிய யாவும் அடியோடு மறைந்து சந்தோஷம் கோபம் இவையுண்டாயின.

---

## 51-வது அத்தியாயம்

துணிகரச் செய்கைகள்—பிரேமநாதனும் கேசவனும் கோட்டையில் சந்தித்தல்—வீரரத்னம்பிரபு—தந்திரமான ஆலோசனைகள்— அபூர்வசம்பவங்களுக்குப் பிரயத்தனங்களும் ஏற்பாடுகளும்.

---

மேலே கூறப்பட்ட சம்பவம் நிகழும் போது பொழுதமரும் சமயமாகி விட்டதால் எங்கும் கூடியவரை யிருள் சூழ்ந்தது. கேசவன் மேல் தளத்தில் ஏறியதும் அகழியின் கரையிருக்குமிடத்திற்கு நேராகச் சென்று அகழியின் மறுபக்கம் ஒரு விடத்தில் உற்று நோக்கினன். அங்கு ஒரு ஆள் உலவிக் கொண்டிருந்தான். அவன் கேசவன் மேலே வந்து நிற்பதைக் கண்டதே தன் கரத்தைத் தூக்கியாட்டினன். கேசவன் உடனே தன் உட்சட்டையில் மறைத்து வைத்திருந்த ஒரு பெரிய கயிற்றை யெடுத்து, அதைச் சுருட்டிக்கொண்டு மேல் தளத்திலுள்ள கைப்பிடிச் சுவரின் ஓரமாகச் சென்று குனிந்து பார்த்தான். அப்போது அகழியின் மறுபக்கமிருந்த மனிதன் அங்கிருந்த சுவரின் ஓரத்தில் வந்திருப்பதைக் கண்டான்.

கேசவன் கயிற்றின் ஒரு முனையைத் தளத்தின் மேலிருந்த ஒரு பீரங்கிக் குழையில் கட்டிவிட்டு சுருணை

யை விசிறி அகழிக்கு அப்புறம் வீசினான். அகழியின் மறுபக்கமிருந்த மனிதன் அதைப்பற்றிக் கொண்டு சுவரின்மேல் நாட்டப்பட்டிருந்த இரும்புக் கம்பிகளில் அக் கயற்றின் மறு முனையைக் கட்டிவிட்டு சரிவாயுள்ள அக் கயற்றின் வழியாக அணிலைப்போல் தொத்தியேறி அகழியைக் கடந்து தளத்தின் மேலுள்ள கைப்பிடிச் சுவரின் மேலேறிக் கேசவனருகிச் சென்றான்.

கேசவன் அவனை நோக்கி "பிரேமநாதா! அது இந்த இரவுதான் நடக்கிறது" என்றான். அங்கு வந்தவன் நமது பிரேமநாதனே. அவன் சந்தோஷத்தோடு கேசவன் கரங்களைப் பற்றிக்கொண்டு "ஆ! இந்த நன்றிக்குத் தக்க பரிசைப் பெறுவாய்; நீ இந்த ஏற்பாடு செய்ததால் நாம் சந்திப்பதற்கு அனுகூலமாகியது. சங்கதியென்ன?" என்றான்.

கேசவன்:—நான் வெளியில் வரமுடியாது. நீ சேகரம் செய்திருக்கும் ஆட்களை இரண்டொரு மணி நேரத்திற்குள் ஒன்று சேர்க்க முடியுமா?

பிரேமநாதன்:—துணிகரமும் பலமும் உடைய ஐம்பது பேர் ஆயத்தமாக விருக்கிறார்கள்.

கேசவன்:—காப்டென் உருத்திரப்பன் கூறியதால் இந்த இரவே அந்த விவகாரம் நடைபெறப் போகிறதென்றுதெரிகிறது. காப்டென் வசத்தில் கோட்டையிலுள்ள காவற் சேனைக்கு உதவியாக இரகசியமாக ஆட்கள் சேர்க்கப்பட் டிருக்கிறார்கள். அவர்கள் அகழியின் கரையிலுள்ள மேட்டில் ஒன்று கூடி சரியாய் இரவு பதினொரு மணிக்கு கோட்டைக்குள் வந்து சேர்வார்கள். அவர்கள் உள்ளே வர அனுமதி பெறுவதற்குக் குறிப்பு வார்த்தை அவர்களின்

தலைவனுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவ்வார்த்தை "மூன்று சீமாட்டிகள்" என்பதே.

இப்போது நீ செய்ய வேண்டியதென்னவெனில், அவர்கள் வரவேண்டிய வேளைக்கு இருபது நிமிடம் அல்லது அரைமணி முன்னதாகவே நீ யுன் ஆட்களைப் யழைத்துக் கொண்டு கோட்டை வாயிற்படிக் கதவைத் தட்டிக் குறிப்பு வார்த்தையைக் கூறினல் உடனே யுங்களை யுள்ளே விட்டு விடுவார்கள்; நீங்கள் உள்ளே வந்ததும், நீ வாயிற் படிக் கதவை மூடி யுட்பக்கம் பூட்டிக்கொண்டு சாவியை யுன்வசம் பத்திரமாக வைத்துக்கொள். அதோடு உடனே யங்கிருக்கும் காவலர்களைக் கட்டிப்போட்டு விடுங்கள். நான் அச்சமயம் அங்கேயிருப்பேன். அங்கிருந்து உங்களைச் சிறைச்சாலைக்கு நான் அழைத்துச் செல்கிறேன். இவ்வளவே சங்கதி—சாக்கிரதை—மிக்க சாக்கிரதையோடு நடந்துகொள்ளவேண்டும். குறிப்பு வார்த்தையை மறந்துவிடாதே. "மூன்று சிமாட்டிகள்" இனி சீக்கிரம் இறங்கிச்செல்" என்ருன்.

பிரேமநாதன் உடனே கயிற்றின் வழியாக இறங்கிப் போய் அதன் மறு முனையை அவிழ்த்துவிட்டதே கேசவன் அதை மேலுக்கு இழுத்துக்கொண்டான்.

பிரேமநாதன் அகழிக்கரையைக் கடந்து சுமார் பத்து கெஜதூரத்தில் சென்றபோது நெடுக கறுப்புப் போர்வையணிந்த ஒரு உயரமான மனிதன் அவன் எதிரில் வந்து நின்று "நீ கயற்றின் வழியாக மேலே ஏறிச் சென்று திரும்பி வந்ததை நான் பார்த்தேன்" என்ருன்.

பிரேமநாதன் திடுக்கிட்டு "அப்படியா? இருக்கட்டும்; நாம் இங்கே நிற்பது ஆபத்துக்கிடமாகும். சற்று

எட்டச் சென்றால் தாராளமாக வார்த்தையாடலாம்'' என்றான்.

அவ்வாறே யிருவரும் சற்றுதூரம் சென்று ஒரு மறைவான விடத்தில் நின்றதும் பிரேமநாதன் அம்மனி தனை நோக்கி "அய்யா! தாங்கள் என் நடக்கைகளைக் கவனித்திருக்கிறீர்கள். ஆகையால் தாங்கள் எனக்குக் கெடுதிசெய்ய மாட்டீர்களென்று எனக்கு ருசுப்படவேண்டும். இன்றேல் இருவரும் கத்திகளை யுருவிக்கொள்ள வேண்டியதே. ஒருவர் மடியவேண்டியதே'' என்றான்.

வந்தமனிதன் "அத்தகைய வேலைக்கு நான் பின்னிடைகிறவனல்ல. ஆனால் நீ இப்போது கூறிய ஒரு வார்த்தையால் இருவரும் சினேகராய்விடும் நிலைமையிலேயே யிருக்கிறோமென்று தெரிகிறது. அங்கிருப்பது அபாயம் என்று கூறினை. அதனால் நீ கோட்டைக்குள் இருப்பவர்களிடம் சினேகபாவம் உடையவனல்லவென்று தோன்றுகிறது. நான் மனம்விட்டுக் கூறுகிறேன். நானும் அவ்வாறே யிருக்கிறேன்.

பிரேமநாதன்:—நீர் கூறுவது உண்மையேயென்று எனக்கெப்படி தெரியும். நீர் கோட்டையிலிருப்போரைச் சேர்ந்தவராகவே யிருந்தால்? நீர் யார்?

புதுமனிதன்:—என் பெயரைக் கூறினால் நீ அதைச் சினேக பாவமாக ஏற்றுக்கொள்வா யென்பது என்ன நிச்சயம்?

பிரேமநாதன்:—ஆம் நாம் இருவரும் ஒருவரை யொருவர் நம்பக்கூடாத நிலைமையிலிருக்கிறோம். ஆகையால் தாங்களும் அக்கோட்டையிலிருப்போர் மேல் நட்புடையவராயில்லை யென்று கூறினீர்களே அதற்கென்ன காரணம் என்பதைப்பற்றி மட்டும் கூறும் பார்ப்போம்.

புது ஆள்:—"அக்கோட்டையில் இப்போது அதிகாரத்தில் இருப்போரின் நடவடிக்கைகள் என் க்ஷேமத்திற்கே கெடுதியை யுண்டாக்கத்தக்கதாக விருக்கிறது" என்றான்.

இதைக்கேட்ட பிரேமநாதன் ஆவலோடு "அப்படியாயின் தாங்கள் யார்?" என்று கேட்டான். அம்மனிதன் சற்று தடுமாற்றமடைந்து, கடைசியில் "நான் வீர இரத்தினம் பிரபு" என்றான். பிரேமநாதன் மிக்க வியப்படைந்து "மேகநாதம் பிரபுவின் புத்திரரா?" என்றான்.

அம் மனிதன் :—ஆம். நான் வீர இரத்தினம் பிரபுவே. அந்தோ கடவுளே! என் சகோதரிகளின் யோக்கியதையை நான் நன்கறிவேனாதலின் நடக்கும் சங்கதியறியாமல் என் மாளிகைக்குள் செல்லலாகாதென்று எச்சரிக்கையோடு நடந்துகொள்ள வேண்டியவனாகவிருக்கிறேன்.

பிரேமநாதன்:—பிரபுவே! தாங்கள் இச்சமயத்தில் என்னைச் சந்தித்ததற்காக நான் மிக்க சந்தோஷமடைகிறேன். கடவுளே உங்களை யிங்கனுப்பினார். இப்போது அக்கோட்டைக்குள் எத்தகைய அக்கிரமச் செயல்கள் நடக்கின்றன தெரியுமா?" என்றான்.

வீரரத்தினம்பிரபு:—நீ கூறுவது இன்ன விஷயமென்று எனக்கு விளங்கவில்லை; ஆனால் அந்தோ என் தங்கைகளின் குணத்தை நானறிந்த வரையில் அவர்கள் எத்தகைய பாபகரமான அக்கிரமத்திற்கும் அஞ்சமாட்டார்கள்.

பிரேமநாதன்:—பிரபுவே! அங்குள்ள பாதாளகிடங்கில் சில ஆட்கள் சிறைவைக்கப்பட் டிருக்கிறார்கள்.

வீரரத்தினம்:—ஆ! என் மூதாதைகளில் முரட்டுத்தன

முடைய எவனோ அப்பயங்கரமான சிறைச்சாலையைக் கட்டிவைத்தான். நான் என் பெயர் முதலிய யாவும் கூறினேன். நீ யின்னும் கூறவில்லையே.

பிரேமநாதன்:—என் பெயர் பிரேமநாதன். நான் ஒரு சாதாரண வேலைக்காரன். என் எஜமானரையும் மற்றவர்களையும் அப்பயங்கரமான சிறையினின்றும் மீட்டு வைக்கக் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கிறேன்.

வீரரத்தினம்:—ஆ! நண்பனே! நான் உனக்கு என்னலான உதவியைச் செய்வேன்.

பிரேமநாதன்:—பிரபுவே இங்கு நிற்பதே ஆபத்து. மிக மெதுவாய்ப் பேசுங்கள். நான் தங்களுக்குக் கூற வேண்டியவை அனேகம் இருக்கின்றன. தங்கள் சகோதரிகள் தங்களுக்குப் பெரிய தீங்கு செய்யச் சதியாலோசனை செய்துகொண் டிருக்கிறார்கள். இப்போது அங்கு சிறையாக்கப்பட்டிருக்கும் நால்வரில் மூன்றுபேரைத் தங்கள் மூன்று சகோதரிகளும் பயமுறுத்தி ஏககாலத்தில் மணம் செய்து கொள்ளச் சதியாலோசனை செய்கிறார்கள்.

வீரரத்தினம்:—ஆ! தெரிந்து கொண்டேன். என் மூதாதைகளில் ஒருவன் இவ்வாறு மூன்று சகோதரிகளும் ஒரே சகோதரனுமிருந்தால், அந்தச்சகோதரிகள் மூவரும் ஏககாலத்தில் ஒரே வேளையில் மணம்புரிந்து கொண்டால் அவர்களுக்கே இராஜாங்கம் சொந்தமென்று எழுதிவைத்தான். இந்தத் துஷ்டர்கள் இப்போது அவ்வாறே செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆனால் என் பரிதாபமான தந்தை பலகீனமான நிலைமையில் எப்படியோ இதில் உடன் பட்டு விட்டார் போலும். அதனால் அவ்வாறேயவர் மரணசாசனம் எழுதி வைத்திருக்கவேண்டுமே.

பிரேமநாதன்:—எழுதி வைத்திருக்கிறார். எல்லாவற்றை யும் அவர்கள் தங்கள் பிரியப்படி செய்து வருகிறார் கள்.

வீரரத்தினம்:—ஆம். இவையாவும் உனக்கெப்படி விபர மாகத் தெரிந்தன?

பிரேமநாதன்:—கோட்டையில் காவலிருக்கும் வீரர்களில் ஒருவனுக்குப் பணம் கொடுத்து அவனை வசப்படுத் திக்கொண்டேன். அவனிடம் பேசி விட்டு வரத் தான் கயிற்றின் வழியாகக் கோட்டையின் மேல் தளத்திற்கு ஏறினேன். மேற்கண்ட சங்கதியை என் எஜமானர் அவனிடம் கூறியதால் அவன் அதை யென்னிடம் வந்து கூறினான். அவன் மூலமாய் அச் சிறை யாளருக்கும் எனக்கும் சம்பாஷணை நடக் கிறது. நாம் பேசிக்கொண்டே செல்வோம். அந்த இரகசியம் இன்னும் அங்கிருக்கும் மற்ற எல்லாக் காவலர்களுக்கும் தெரியாது.

வீரரத்தினம்:-அய்யோ கடவுளே! இத்தகைய அக்கிரமப் பெண் பேய்களை நான் சகோதரிகளென்று கூறும் படி வைத்தாயே. சரி. இப்போது இந்த அக்கிர மத்தைத் தடுக்க நீ என்ன முயற்சி செய்கிறாய்? உன் ஏற்பாடுகள் தான் என்ன?

பிரேமநாதன்:—நான் பணத்தை யேராளமாகச் செலவு செய்து நல்ல துணிகரமும் பலமுமுடைய ஐம்பது ஆட்களை ஆயத்தம் செய்திருக்கிறேன். அவர்கள் எதற்கும் அஞ்சாத போக்கிரிப்பயல்கள்.

வீரரத்தினம்:—அவர்கள் எப்படிப்பட்டவர்களானாலும் சரி. அவர்கள் நம்பக்கூடியவர்கள்தானே?

பிரேமநாதன்:—அவர்கள் பூரணமாய் நம்பத்தக்கவர்களே.

நான் இப்போது கொடுத்திருக்கும் பணத்திற்கும், இனி கொடுப்பதாகக் கூறியிருக்கும் பரிசுக்கும் அவர்கள் நன்றியுடையவர்களாகவே யிருப்பார்கள். பிரபுவே! தங்களோடு யாரும் ஆட்கள் வரவில்லையோ?

வீரரத்தினம்:—"என்னோடு கூட நம்பிக்கையான இரண்டு ஆட்கள் வந்திருக்கிறார்கள். நான் இரண்டு மூன்று நாட்களுக்கு முன் என் தந்தை அபாயகரமான நிலைமையிலிருப்பதாகக் கேள்விப்பட்டேன். உடனே இங்கு புறப்பட்டு வந்தேன். என் சகோதரிகளின் நடக்கை யெனக்குத் தெரிந்திருக்கிறவரையில், என் தந்தையின் நிலைமையை யவர்கள் எனக்குத் தெரிவிக்காதிருப்பதால், அவர்கள் எனக்குத் துரோகம் செய்யக் கருதி யிருக்கிறார்களென்று என் புத்தியிற் பட்டது. அதனால் என் ஆட்களை இரண்டு மூன்று மைல்களுக் கப்பாலிருக்கும் ஒரு கிராமத்தில் விட்டு விட்டு நான் மாத்திரம் தனியே இருட்டியபின் இங்கு வந்தேன். யாருக்கும் தெரியாமல் கோட்டையில் என்ன சமாசாரம் நடக்கிறதென் றறியவே அகழியோரம் வந்து நின்றிருந்தேன். நீ கயிற்றின் வழியாக ஏறியதைக் கண்டதே ஓகோ என்னமோ விசேஷம் நடக்கிறது என்று தெரிந்து கொண்டேன்" என்றான்.

பிரேமநாதன்:—பிரபுவே! கடவுளே உங்களுக்கு வழி காட்டினார். நான் இப்போது அந்த ஐம்பது ஆட்களும் இருக்கும் இடங்களுக்குச்சென்று அவர்களெல்லாம் பத்துமணிக்குள் ஒரு விடத்தில் வந்து சேரும்படி செய்யவேண்டும். அவர்கள் உதவவேண்டிய வேளை நெருங்கியிருக்கிறதென்று முன்னமே கூறி

யிருப்பதால் அவரவர்கள் தங்கள் தங்கள் இடத்தி லேயே யிருப்பார்கள். தாங்கள் என் கூட வந்தால் யாராவது பார்த்து தெரிந்து கொள்வார்கள். பிறகு எப்படியாவது சங்கதி கோட்டைக்கு எட்டி விடும். தாங்கள் சரியாகப் பத்துமணிக்கு கடற்கரையில் தாங்கள் கரையிறங்கிய இடத்திற்கருகில் ஒரு உயர மும் செங்குத்துமான பாறையிருக்கிறதே அங்கே வந்திருங்கள். தாங்கள் நமது ஆட்களுக்குத் தலைவ ராக இருங்கள்.

வீரரத்தினம்:—"ஆ! நீ மிக்க பெருந்தன்மையான குண முடையவன். நீ இவ்வளவு கஷ்டம் எடுத்துக்கொண் டிருக்கையில், அந்த கௌரவம் உனக்கே யிருக்க வேண்டும். நான் அதை யபகரித்துக்கொள்ள லாகாது" என்று கூறினன்.

பிரேமநாதன்:—"பிரபுவே! தாங்கள் தலைமை வகிப்பதே தகுதி. தங்கள் வரவை யறிந்ததே கோட்டையில் காவலரனைவரும் பிரமித்துத் திகைத்து விடுவார்கள். சுலபத்தில் வெற்றியுண்டாய்விடும். அவர்கள் தங்க ளுக்கு உதவியாகவே திரும்பிவிடலாகும்" என்றான்.

வீரரத்தினம்:—"இல்லையில்லை. நீயே தலைவனாகவிரு நான் உங்கள் பின்னாலேயே வருகிறேன்" என்றான்.

பிரேமநாதன்:—அப்படியாயின் தங்கள் கட்டளைப்படி நடக்கச் சித்தமாக விருக்கிறேன்.

வீர:—"ஆ! என் பெயரை மட்டும் அறிந்து கொண்டாயே யன்றி, உன் பெயர் உன் எஜமான் பெயர் இவை யொன்றும் கூறவில்லையே" என்றான்.

பிரேமநாதன் "பிரபுவே! நான் தாழ்ந்த நிலையி லுள்ள வேலைக்காரன் என்று முன்பே கூறினேன். என்

பெயர் பிரேமநாதன். என் எஜமானரோ உலகப் பிரசித்திப் பெற்றவர். அவர் நாமதேயம் ஜனரல் உக்கிரசேனர்'' என்றான்.

அம்மொழியைக் கேட்டதே வீரரத்தினம் பிரபு திடுக்கிட்டு அடங்கா வியப்படைந்து, "என்ன? உலகில் இணையற்ற வீரசிங்கமான சுத்தவீரரும் இப்போது மேற்குநாட்டிற்கு இராஜப் பிரதிநிதியாக அனுப்பப்பட்டவருமாகிய ஜெனரல் உக்கிரசேனரா? அட கடவுளே! அவர் அக்கோட்டையில் சிறையாக வைக்கப்பட்டிருக்கிறார். அவரை விருந்தினராகப் பெற்றதை நாங்கள் பெருங்கௌரவமாகக் கருதவேண்டுமே. அடடா. நண்பனே! நாம் சற்றும் ஆலசியம் செய்யாமல் அவரை யுடனே மீட்கவேண்டும். நான் சரியாகப் பத்து மணிக்கு அப்பாறை யருகில் ஆயத்தமாக வந்திருக்கிறேன். நீ துரிதமாகச் சென்று அந்த ஆட்களைச் சேகரித்துவா'' என்றார்.

பிரேமநாதன் உடனே நகருக்குள் பிரவேசித்து தாழ்ந்த அந்தஸ்து ஹோட்டல்களுக் கெல்லாம் சென்று தன் ஆட்களுக்குச் சமிக்கைகளால் சங்கதியை யறிவித்துவிட்டுத் தான் போஜனம் செய்யும் ஹோட்டலுக்குச் சென்று ஆகாரம் பொசித்துச் சரியாகப் பத்து மணிக்குக் குறித்த பாறையருகிற் சென்றான்.

வீரரத்னம் பிரபு முன்பே அங்கு வந்திருந்தார். அவர் பிரேமநாதனைக் கண்டதும், "சுமார் கால்மணி நேரமாக ஆட்கள் நான்கு பேர் ஐந்து பேர்களடங்கிய சிறு கூட்டங்களாக வந்து வந்து அதோ தெரிகிறதே அந்த இருண்ட விடத்தில் போய்ச் சேர்ந்துகொண் டிருக்கிறார்கள்'' என்றான்.

இவர்களிருவரும் அச்சமயம் தற்செயலாகக் கோட்டையை நோக்கினார்கள். உடனே திடுக்கிட்டார்கள். ஏனெ

னில் அந்த வேளை பாதாளகிடங்கின்மேல் தீபவொளி தெரிந்தது. பிரேமநாதன் "கடவுள் தயவால் இந்தவெளிச்சம் அங்கு தோன்றுவது இதுவே கடைசி முறையாக இருக்கவேண்டும்" என்ருன்.

சரியாய் பத்தரைமணிக்குப் பிரேமநாதனும் அவனுடைய ஆட்களும் வீரரத்தினம் பிரவும் கோட்டையை நோக்கிப் புறப்பட்டார்கள். பிரபு அனைவர்க்கும் பின்னுல் முகமூடி யணிந்துகொண்டு சென்ருர். இவர்கள் கோட்டை வாயிற்படியில் சென்றதும் கதவைத் தட்டினுர்கள். உள்ளிருந்து யாரங்கே? என்று சத்தம் வந்தது. பிரேமநாதன் நண்பர்கள் என்ருன். காவலன் குறிப்பு வார்த்தை? என்ருன்.

பிரேமநாதன் "மூன்று சீமாட்டிகள்" என்ருன். உடனே கதவுதிறக்கப்பட்டதும் யாவரும் உள்ளே நுழைந்தார்கள். வீரரத்னம் யாவர்க்கும் கடைசியில் உள்ளே நுழைந்தான். நுழைந்ததும் கதவை மூடிப் பூட்டிக்கொண்டு சாவியைக் கையில் எடுத்துக் கொண்டான்.

அதே சமயம் ஆட்களனைவரும் தங்கள் வாட்களை யுருவிக் கொண்டார்கள். அந்த வாயிற்படியிலிருந்த இரண்டுபேரும் உடனே நிராயுதபாணிகளாக்கப்பட்டுக் கட்டப்பட்டார்கள். உடனே யாவரும் காவற்படையிருக்கும் அறைக்குள் நுழைந்தார்கள். அங்கிருந்த பதினைந்து இருபது பேர் தங்களுக்குத் துணைப்படை வருவதாய் நம்பியிருந்ததால் மிக்க அஜாக்கிரதையாகக் கேளிக்கையாய்ச் சம்பாஷித்துக்கொண் டிருந்தார்கள்.

திடீலென்று எதிர்பார்க்காதவிதமாக ஆயுதம் தரித்த ஆட்கள் விரோதமான பார்வையோடு உள்ளே நுழைந்ததைக் கண்டதும் திடுக்கிட்டுப் பிரமித்தார்கள். அவர்களின் ஆயுதங்கள் உடனே பிடுங்கப்பட்டதும் யாவரும்

சிறையாக்கப்பட்டார்கள். அறைக்குள் நுழையும்போது வீரரத்தினம் பிரபு தன் முகமூடியைக் களைந்துவிட்டதால் அவரைக்கண்ட வீரர்கள் பெருந்திகிலடைந்து கருடனைக் கண்ட நாகம்போல் ஆவிசோர்ந்தார்கள். ஏனெனில் அவர் சாதாரணமாகத் தங்கள் எஜமானரேயாயினும்,குற்றமுள்ள நெஞ்சுடைய அவர்களுக்கு அவர் வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் நோக்க முடையவராகவே தோன்றியது.

இதற்கிடையில் கோட்டையில் என்ன சம்பவம்நடந்ததென்று பார்ப்போம். பிரேமநாதனும் அவன் ஆட்களும்வீரரத்தினமும் கோட்டைக்குள் நுழையும்போது மணி பத்தரைக்குமேல் ஆயிற்று. சுமார் இரண்டு மணி நேரத்திற்கு முன், அதாவது ஒன்பது மணிக்கு அங்கு நடந்த விஷயத்தைக் கவனிப்போம்.

சரியாய் ஒன்பது மணிக்குக் கேசவன் காப்டென் கட்டளை யிட்டபடி அவன் அறைக்குச் சென்று பார்த்தான், அங்கு ஒரு அலமாரியில், மூன்று புட்டிகள் ஒயின் வைத்திருப்பதைக் கண்டான். அச்சமயம் அங்கு யாருமில்லை. உடனே கேசவன் அங்கிருந்த ஆகாரம் வைக்கப்பட்டிருக்கும் அலமாரியைத் திறந்து சுலபமாக மறைத்து எடுத்துக்கொண்டு போகத்தக்க நல்ல உண் பொருள்களில் எடுத்துச் செல்லக்கூடுமட்டும் எடுத்து ஒரு சீலையில் கட்டியெடுத்து மேல்போர்வைக்குள் மறைத்து வைத்துக் கொண்டு மூன்று ஒயின் புட்டிகளையும் கையில் எடுத்துக்கொண்டு வெளியிற் சென்று இரண்டு ஆட்களைக் கூட அழைத்துக்கொண்டு ஒரு தீபத்தை யெடுத்துக் கொண்டு கோட்டையின் மேல்தளத்திற்குச் சென்றான்.

அங்கு சென்றதும் கேசவன் கையில் வைத்துக்கொண்டிருக்கும் புட்டிகளோடு இராந்தலையும் எடுத்துக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டே மற்ற இரண்டு ஆட்

களும் நாற்காலியைக் கீழே யிறக்கினர்கள். அங்கிறங்கி யதும் கேசவன் நாற்காலியிலிருந்து கீழிறங்கி முதல் ஜன ரல் உக்கிரசேனர் இருக்கும் அறைக்குச் சென்றான்.

ஜெனரல் அவனைக் கண்டதும் "நல்ல நண்பனே! விவ காரங்கள் இப்போது என்ன நிலைமையிலிருக்கின்றன?" என்றார்.

கேசவன்:—மகாப்பிரபு! "அவ்விஷயம் இந்த இரவு தான் நடக்கப்போகிறது. ஆனால் நமது ஏற்பாடுகள் மிக்க திருப்தியாகவே நடைபெறுகின்றன. வீரத்தன்மை யுடைய தங்கள் வேலையாளான பிரேமநாதனை மாலை சந்தித்தேன். மிக்க ஆச்சரியமான விதமாக எங்க ளுக்குத் தக்க சந்தர்ப்பம் வாய்ந்தது. இப்போது பிரேமநாதன் தன் ஆட்களோடு கோட்டைக்குள் கஷ்டத்தோடு பிரவேசிக்க வேண்டிய அவசியமே யில்லை. ஏனெனில் கோட்டைக்குள் நுழையவேண் டியதற்கு அவசியமான குறிப்புவார்த்தை தெய்வ சங்கற்பமாய் எனக்குக் கிடைத்ததால் அதைப்பிரே மநாதனுக்குக் கூறி யிருக்கிறேன்" என்றான்.

நேயர்களே! இத்தகைய சந்தோஷத்தை அத்த கைய ஆபத்துசமையத்தில் கேள்விப்பட்ட ஒரு மனிதன் தன் சந்தோஷத்தைத் துள்ளிக்குதித்து வெளியிடாமற் போகான். ஆனால் நமது ஜனரல் உக்கிரசேனன் ஆபத் தையும், துயரமான சங்கதியையும் எப்படி அலட்சியமா கக்கருதுகிறானோ அவ்வாறே சந்தோஷ சங்கதியையும் கருதும் குணமுடையவன். அதாவது சுக துக்கங்களில் சமபுத்தியுடையவன். ஆகையால் அத்தகைய சந்தோட சமாசாரத்தைக்கேட்டபின் "நல்லதாயிற்று" என்று ஒரு வார்த்தை மட்டும் கூறினான். ஆனால் இதற்கிடையில் இவன்

உண்மை யுடையவனு வென்று கேசவனை யுற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

கேசவன் "பிரபுவே! தங்களுக்குக் காலையிலேயே போதுமான ஆகாரங்கொடுக்கவில்லையாதலின் இப்போது ஏராளமான நல்ல உணவுப்பொருள்களைக் கொண்டுவந் திருக்கிறேன். இதோ ஒருபுட்டி ஒயின்கூடக் கொண்டுவந் தேன்" என்று கூறிக்கொண்டே உணவுப்பொருள்கள் புட்டி யாவற்றையும் கம்பிகளினிடையில் ஜனரலிடம் அளித்தான். அப்போது ஜனரலுக்கு இவன் உண்மையான வனே என்று புலப்பட்டது.

கேசவன் "காப்டென் தங்களுக்குத் துளி ஆகார மாவது ஜலமாவது கொடுக்கவேண்டாமென்று மிகக் கண் டிப்பாய்க் கட்டளை யிட்டான். பிறகு அவன் என்னைக் கேட்டபோது நான் அப்படியே நடந்து கொண்டதாகக் கூறினேன். நான் மற்ற மூவருடைய ஆகாரத்திலும் கொஞ் சம் கொஞ்சம் எடுத்துக்கொண்டு. அதைத் தங்களுக்களித் தேன் என்று அம்மூடன் அறியான்" என்றான்.

ஜனரல்:—நீ செய்தது மேலான உதவி. இதை நான் மறக்க மாட்டேன். ஒரு வார்த்தை, இந்த அறைகளின் எல்லா இரும்புக் கதவுகளையும் திறக்கும் அந்த ஒரே சாவியிருக்கிறதே அது எப்போதும் கற்பகச் சீமாட் டியினிடமே யிருக்கிறதா? இது நிச்சயமாகத்தெரிய வேண்டும்" என்றார்.

கேசவன் :—ஆம் புதிதாக யாராவது சிறையில் வைக்கப் படும்போது அந்தச் சாவி காப்டனிடம் அளிக்கப் படுகிறது. ஆனல் அந்த ஆளை அந்த அறையில் விட் டுப் பூட்டியானதே யுடனே சாவி யாவர்க்கும் மூத்த சகோதரியாகிய கற்பகச் சீமாட்டி யிடமே யளிக்கப்

படும். பிறகு அது அவள் மடியை விட்டு அப்புறம் செல்லாது'' என்றான்.

ஜனரல் :—'' சரி. அந்த நிச்சயம் அவசியம் தெரிய வேண்டியதாக விருக்கிறது. ஏனெனில் நமது சூட்சி ஜயமடையவேண்டியது முழுதும் அதைப் பொறுத்ததாக விருக்கிறது. இனி நீ சென்று மேஜர் இலக்ஷ்மணனுக்கும், உலகநாயகனுக்கும் சங்கதியைக் கூறிவிட்டுச்செல்'' என்றார்.

கேசவன் அவ்வாறே சென்று மற்ற மூவரையும் கண்டு சங்கதி கூறினன். இலக்ஷ்மணனுக்கும் உலகநாயனுக்கும் ஒவ்வொரு புட்டி ஒயின் கொடுத்தான்; இராமநாதனுக்கு மட்டும் இல்லை. ஏனெனில் அவன்பங்கு புட்டியைத் தான் ஜனரல் உக்கிரசேனனுக்குக் கொடுத்து விட்டான். இவ்வேலை முடிந்ததும் அவன் மேல் தளத்திற்குச்சென்று பிறகு கோட்டை வாயிற்படிக்குச் சென்றான்.

## 52-வது அத்தியாயம்.

மேகநாதம் பிரபுவின் மரணம்--சகோதரிகளின் சதியாலோசனையும் படுகோலையும்-பாதாளக்கிடங்கில் சகோதரிகளின் நடக்கைகள்—திடுக்கிடத்தக்க வீரச்செயல்கள்.

கேசவன் பாதாளகிடங்கில் இருக்கும்போது சகோதரிகள் மூவரும் தங்கள் அறையில் உட்கார்ந்து நன்றாய்க் குடித்துக் கொண்டும் பழம் பலகாரம் முதலியவைகளை யருந்திக்கொண்டும் இருக்கிறார்கள். தங்கள் காரியம் எப்படியும் நிறைவேறிவிடும் என்ற நம்பகத்தால் மூவரும் சந்தோஷத்தோடு சம்பாஷித்துக்கொண் டிருக்கிறார்கள். அச்சமயம் மாரியாயி அங்கு வந்து கலவா

மடைந்த முகத்தோடு "எஜமாட்டிகளே! தங்கள் தந்தையின் நிலைமையில் ஒருவித பயங்கரமான மாறுதல் உண்டாயிருக்கிறது. வைத்தியர் உங்களைச் சீக்கிரம் அழைத்து வரச் சொன்னார்" என்றாள்.

சகோதரிகள் மூவரும் உடனே குறிப்பாய் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக் கொண்டு எழுந்து தந்தை யிருக்கு மறைக்குச் சென்றார்கள். உடனே தங்கள் தந்தை மரணத்தருவாயில் இருப்பதை யறிந்தார்கள். இரண்டொரு நிமிடங்களுக்குள் மேகநாதப் பிரபு விண்ணுலக மடைந்தார்.

சகோதரிகள் உடனே யொருவரை யொருவர் குறிப்பாய் நோக்கிக் கொண்டார்கள். தங்கள் காரியம் நிறைவேறு முன் தந்தை மரணமடைந்து விட்டார். மரண சாசனத்தின் நிபந்தனைப்படி அவர் மரணத்திற்குமுன்பே யிவர்கள் மூவரும் மணம் புரிந்துகொண் டிருக்கவேண்டும். எவ்வாற்றானும் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்பதே அவர்கள் தீர்மானம். ஆகையால் இப்போது சீக்கிரம் மூவரும் கலியாணம்செய்துக்கொள்ள வேண்டும். பிரபு அதன் பிறகு இறந்ததாகவே பிரஸ்தாபம் செய்யவேண்டும். இவ்வளவு விஷயத்தையும் சமிக்கைகளாலேயே அவர்கள் பேசிக்கொண்டார்கள்.

கற்பகம் மாரியை யந்த அறையிலேயே யிருக்கும்படி கட்டளையிட்டு விட்டு வைத்தியரை நோக்கி "வைத்தியரே! தயவுசெய்து எங்களோடு கூட வாருங்கள். தங்களிடம் ஒரு சங்கதியைப்பற்றி பேசவேண்டும்" என்றாள். உடனே மூவரும் வைத்தியரை யழைத்துக்கொண்டு வேறொரு அறைக்குச் சென்று அங்கிருந்த மேஜையினருகிலுட்கார்ந்தார்கள். அம்மேஜையின் பேரில் ஒயின், பழங்

கள், சிற்றுண்டிகள் முதலியயாவும் ஆயத்தமாக வைக்கப் பட்டிருந்தன. இம்மாதர்கள் தங்கள் தந்தையின் மர ணத்திற்காகப் போதுமான துயரங் காட்டாததைப்பற்றி வைத்தியர் வியப்படையவில்லை. ஏனெனில் அவர்கள் நெஞ்சத்தின் கடின சுபாவம் அவருக்குத் தெரிந்ததே. அவர்கள் தந்தைக்கு மிக்க சாக்கிரதையோடு செய்து கொண்டிருந்த உபசாரம் கூட, அவர் இறந்து போனால் தங்கள் செல்வாக்கிற்குப் பங்கம் நேரிடும் என்ற சுயநலங் கருதியே யன்றி உண்மையன்பினால் செய்யப்பட்ட தன் றென அவர் அறிவார்.

நால்வரும் அங்கு உட்கார்ந்ததே சண்பகம் "வைத் தியரே தாங்கள் நெடுநேரமாக நோயாளியைக் கவனித் திருந்து களைத்திருக்கிறீர்; முன்னே கொஞ்சம் ஒயின் அருந்தும் என்று ஒரு கிண்ணத்தில் அப்பானத்தை யூற்றி யவரிட மளித்தாள். வைத்தியர் சுமார் அறுபது வய துடையவர். தேகபலம் குன்றியவர்; அவர் வந்தனத் தோடு அப்பானத்தை வாங்கி யருந்தினர். கற்பகம் அவ ரைநோக்கி "வைத்தியரே! தாங்கள் எங்களுக்கொரு உதவி செய்யவேண்டும். அதாவது தாங்கள் இன்னும் சில மணிகள் நேரம் இங்கேயே யிருக்கவேண்டும். பிறகு பிரபுவின் மரணத்தைப்பற்றி பிரஸ்தாபிக்கும்போது அவர் இரண்டு முன்று மணி நேரம் கழிந்த பின் இறந்தா ரென்று கூறவேண்டும்" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே வைத்தியர் மிக்க வியப் பும் கொஞ்சம் கோபமுமடைந்து, "சீமாட்டிகளே! நான் அசத்தியம் கூறுவேன் என்று நீங்கள் எண்ணியது என க்கு மிக்க விசனத்தை யுண்டாக்குகிறது" என்றார்.

கற்பகம்:—உண்மையைக் கூறலாகாச் சமயமும் உண்டு.

சண்பகம்:—ஆம் சில சமயங்களில் உண்மையைக் கூறுவ தால் அசௌகரியங்கள் நேரிடலாகும்.

வைத்தியர்:—நான், பிரபுவின் மரணத்திற்குக் காரணம் மரித்தவேளை முதலிய விபரங்களடங்கிய ஒரு நற் சாட்சி பத்திரம் எழுதி ஜனப்பிரதிநிதி சபைக்கு அனுப்ப வேண்டுமென்பது விதி.

கற்பகம்:—அது எங்களுக்குத் தெரியும். தாங்கள் உட னே நற்சாக்ஷி பத்திரத்தை யெழுதவேண்டியதே. ஆனால் மணியை மட்டும் குறிக்காமல் அந்த இடத் தைக் காலியாக விட்டுவிடுங்கள். பிறகு நாங்கள் அதைக் குறித்துக் கொள்கிறோம்.

சண்பகம்:—ஆ! இதுதான் சரி. இப்போது நீர் ஆக்ஷே பிக்கக் காரணமேயில்லை.

வைத்தியரோ உண்மையாகவே சத்தியவான். இவர் கள் கூறுவது அவருக்குச் சற்றும் சம்மதமில்லை. இவர் கள் ஏதோ தகாத காரியம் செய்ய உத்தேசிக்கிறார்கள் என்று அவர் மனதிற்பட்டது. ஆனால் அது எத்தகைய காரியமென ஊகிக்கக் கூடவில்லை. அவர் சகோதரிகளை நோக்கி "சீமாட்டிகளே இந்தச்சந்தர்ப்பத்தில் உங்களுக்கு அதிருப்தியை யுண்டாக்கத்தக்க விடையே நான் அளிக்க வேண்டும். நீங்கள் கூறுகிறபடி செய்தாலும் நான் தவ றாக நடந்ததே யாகும். நீங்கள் செய்யச் சொல்லும் காரி யத்தால் எவ்விதக் கெடுதியும் சம்பவியாதென்று தெரிந் தால்..." என்றதே.

கற்பகம்:-"அய்யா! நீங்கள் எங்களைக்கேள்விகேட்க வேண் டாம்; நாங்கள் கூறுகிறபடி செய்யும். அதோ எழுது கருவிகள் இருக்கின்றன பேசாமல் எழுதும்" என் றாள். வைத்தியர் சற்றும் அஞ்சாமல் "நான் அப்படி யெழுதினால் பின்னால் நீங்கள் பொய்யான காலத்தை

யதில் குறித்துக்கொள்ளத்தானே நினைக்கிறீர்கள். அப்போது நானும் இதற்கு உடந்தையாக விருந்ததாகவே கருதப்படுமல்லவா?'' என்றார்.

துளசிபாய்:—“இதைப்பற்றி யுங்களை யார் கேட்கப்போகிறார்கள்?'' என்றாள்.

சண்பகம்:—“உம்மை யொருவரும் கேட்கமுடியாது'' என்றாள்.

கற்பகம்:—“சகோதரிகளே! இவ்வளவேன்? நாம் உண்மையைக் கூறிவிட்டால் இவருடைய கலவரம் நீங்கிவிடும். வைத்தியரே! ஒரு விசேஷமுமில்லை. நாங்கள் எங்கள் தமையனுக்குச் சற்று ஆலசியமாகச் சமாசாரமனுப்பினோம். மரணம் இவ்வளவு சமீபத்திலிருக்க முன்னமே தனக்குத் தெரிவிக்கவில்லையென்று எங்கள்மேல் கோபிப்பார் என்று அஞ்சுகிறோம். இது தான் உண்மை'' என்றாள்.

186482

அவள் வார்த்தையை வைத்தியர் மெய் யென்று நம்பினார். “அப்படியாயின் நான் நீங்கள் கூறியபடி எழுதுகிறேன்'' என்றார். சண்பகம் உடனே எழுது கருவிகளையவர் முன்கொண்டுவந்து வைத்தாள். சகோதரிகள் மறுபடி கண்களால் சமிக்கை செய்து கொண்டார்கள். அச்சமயம் வைத்தியர் அவர்கள் முகங்களை மட்டும் பார்த்து விட்டிருந்தால், அவர்கள் மனதில் ஏதோ பயங்கரமான விபரீதயோசனை யிருக்கிறதென்று உணர்ந்திருப்பார்.

வைத்தியர் 'நற்சாக்ஷிப் பத்திரத்தை யெழுதிக் கொண்டே யிருக்கையில் கற்பகம் எழுந்து சென்று அங்கிருந்த ஒரு பெட்டியைத்திறந்து அதிலிருந்து ஒரு மிகச் சிறிய புட்டியை யெடுத்து இரகசியமாகச் சண்பகத்தினிடம் அளித்தாள். அவள் அதைத் துளசிபாயிடமளித்தாள். வைத்தியர் யாவும் எழுதி முடித்துக் கையொப்

# மின்சாரமாயவன்.

ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இது ஓர் மிக்க அபூர்வமான கள்ளன் சரித்திரம். கதாநாயகனாகிய மின்சாரமாயவன் என்னும் கள்ளன் கல்வியும், புத்திசாமர்த்தியமும், தீரமும் உடையவன். ஆதலால் அவன்செய்கைகள் ஒவ்வொன்றும் மிக்க பிரமிப்பை யுண்டாக்கத்தக்கதா யிருக்கும். அவன் ஆபத்தில் சிக்கிக்கொள்ளும் ஒவ்வொரு சமயமும் தப்புவான் என்று ஒருவரும் கருதார்கள். இது அறிவாளிகளுக்கும் மிக்க விருப்பத்தையும், உலக அனுபவம்பெற அறிந்து கொள்ள வேண்டிய பல விஷயங்களையும் அளிக்கக்கூடியது. ஆதிமுதல் அந்தம் வரை மனதைக் கவர்ந்து கொள்ளத்தக்கது. பெண்களைக் கட்டில் வையாது ஆண்பிள்ளைகளை விடுவதுபோல் விட்டு விடுவதால் நேரிடும் விபரீதங்களை இதில் அனுபவமாய்க் காணலாம். நல்ல கடிதத்தில் சுத்தமாய்ப் பதிப்பிக்கப்பட்டது. சுமார் 350 பக்கங்களுக்குமே லுடையது.

விலை ரூபா **1—8—0.**

புது! துப்பறியும்!! நாவல்!!!

## வெளியாய் விட்டது.

# மஞ்சள் அறையின் மர்மம்

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.

இதுகாறும் அவரால் வரையப்பட்ட அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லை யென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச்செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமர்த்தியச்செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவே யிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. காகித விலையால் சொல்ப பிரதிகளே அச்சிடப்பட்டன. விலை ரூ. 1 8 0

தபால் கூலி பிரத்யேகம்.

---

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி,
சௌகார்பேட்டை, மதராஸ்.

# "ஆனந்தபோதினி"

### ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஆம் ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க சோர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி வேண்டுவோர் 1 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

### ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூபா | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் | | | திவாகரசுந்தரி | 1 | 0 |
| 2-பாகமும் ... | 4 | 0 | பத்மாஸனி ... | 0 | 14 |
| கற்கோட்டை ... | 2 | 0 | வீரநாதன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| கனகபூஷணம் (மறுபதிப்பில்) | | | பவளத்தீவு-அச்சில் | | |
| சுவர்ணாம்பாள் ... | 0 | 12 | பூங்கோதை ... | 0 | 10 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 | இந்திராபாய் அச்சில் | | |
| மதனபூஷணம் ... | 1 | 0 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸருடையசரித்திர உபதேசங்கள் | 1 | 12 | சகோதரவாஞ்சை | 0 | 6 |
| | | | ஷை ஸ்கூல் பதிப்பு ... | 0 | 7 |

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Power Press, Madras.